E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஒக்டோபர் 29 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 256 | Saturday 29, October, 2022 | 12பக்கங்கள் | 40/-

பிரபல TV நிகழ்ச்சியில் சிறப்பு அதிதியாக

## இந்தியாவில் யோஹானிக்கு கிடைத்த மாபெரும் கௌரவம்



இலங்கையின் பிரபல பாடகி யோஹானி டி சில்வா இந்தியாவின் மிகவும் பிரபலமான தொலைக் காட்சி நகைச்சுவை நிகழ்ச்சியான 'கபில் ஷர்மா'வில் 06

அரசின் நலன்புரி வசதிகள் பெற தகுதியுடையோர்

## விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நேற்றுடன் பூர்த்தி

அடுத்த கட்டமாக வீடுகளுக்கு சென்று தரவு உறுதிப்படுத்தல்

நலன்புரி வசதிகளைப் பெறத் தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நேற்று 28 ஆம் திகதியுடன் பூர்த்தியாகியுள்ளன. இத் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணியாக விண்ணப்பதாரரின் வீடுகளுக்குச் சென்று தரவுகளை உறுதிப்படுத்தும் பணிகள் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படுமென்றும் நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

"எவரையும் கைவிடாதீர்" என்ற தொனிப் பொருளில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கும் துரித வேலைத் திட்டத்துக்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நேற்றுடன் (28) நிறைவடைந்திருப்பதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் நலன்புரி உதவிகளை எதிர்பார்த்து, இதுவரை 2.4 மில்லியன் விண்ணப்பங்கள் 06

## கழிவு மண் ஏற்றி வந்த டிராக்டரில் கண்ணிவெடி மீட்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னாரில் கழிவு மண் ஏற்றி வந்த டிராக்டர் வண்டியில் மண்ணுக்குள் புதையுண்டிருந்த வெடிக்காத நிலக் கண்ணிவெடியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாப்பாமோட்டை பகுதியிலிருந்து மன்னார் நகரிலுள்ள சாவக்கட்டு மயானப் பகுதிக்கு (27) கழிவு மண் ஏற்றி வந்த டிராக்டர் வண்டியிலேயே இக்கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மண் இறக்கும் இடத்தில் வேலை செய்த நபர் ஒருவரால் கண்ணிவெடி 06



யாழ். பல்கலையில் நேற்று நடைபெற்ற JUICE – 2022 ஆய்வு மாநாட்டின் ஆய்வுச் சுருக்கங்களை இணையாசிரியர் கலாநிதி கந்தையா பகீரதன் வெளியிட்டு வைக்க முதன்மை உரையாளர் முதல் பெண்மணி சிரேஷ்ட பேராசிரியர் திருமதி மைத்திரீ விக்கிரமசிங்க பெற்றுக் கொண்டபோது பிடிக்கப்பட்டபடம். இணையாசிரியர் திருமதி பி. முரளீதரன், பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ், துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, ஆய்வு மாநாட்டின் செயலாளர் க.சசிகேஷ் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எஸ் சிவகௌரி ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம் – யாழ்.விசேட நிருபர் மயூரப்பிரியன்)

புவியியல் அமைவிடம், மாணவரது தேவைகளை கருத்திற்கொண்டு

# தேசிய பாடசாலைகளுக்கு பதிலாக கொத்தணி பாடசாலைகள் முறை

முழு சமூகத்தையும் பிளவுபடுத்தும் தேசிய பாடசாலைக் கருத்திட்டத்துக்குப் பதிலாக, புவியியல் அமைவிடம் மற்றும் மாணவர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு முன்னணி பாடசாலைகளுடன் கூடிய பாடசாலைக் கொத்தணிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இந்த கொத்தணி பாடசாலைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்னணி பாடசாலைகள் முதன்மையாக செயல்படுமென்றும் அமைச்சர் கூறினார். கொழும்பு கல்வி வலய அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அமைச்சர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்துக்குள், நாடு தழுவிய ரீதியில் சுமார் 1,200 பாடசாலைகளை அடையாளம் காண முடியுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரு கொத்தணியிலுள்ள பாடசாலைகளுக்கிடையிலான முகாமைத்துவச் செயற்பாட்டின் ஊடாக, பௌதீக மற்றும் மனித வளங்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு செலவு குறைந்த மற்றும் திறமையான பொறிமுறையொன்று அமைக்கப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.



இங்கு பாடசாலைகளை அல்லது வளங்களை மாற்றவோ அல்லது பிரித்தறியவோ முடியாது, பௌதீக மற்றும் தொழில்நுட்ப முறைகள் மூலம் பரிமாற்றம் மட்டுமே நடைபெறும் என்று அமைச்சர் கூறினார்.

ஒவ்வொரு மாணவரும் கைவிடப்படாமல் அவர்கள் மீது கவனம் ஈர்க்கப்படும். மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் என 06

நாட்டிலுள்ள சுமார் 68 இலட்சம் குடும்பங்களில்

## அரசிடம் நிவாரணம் கோரும் சுமார் 40 இலட்சம் குடும்பங்கள்

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

நாட்டில் உள்ள 68 இலட்சம் குடும்பங்களில் 40 இலட்சம் குடும்பங்கள் நிவாரணங்களை கோருவதாக தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அவர்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு வரி அறவிடுவதை விட வேறு வழிகள் இல்லை எனவும் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.



18 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் 06

யால சரணாலய சம்பவத்தின் எதிரொலி:

## தேசிய பூங்காக்களுக்குள் தனியார் வாகனங்கள் உட்பிரவேசிக்க தடை

அமைச்சர் மஹிந்த அமரவீர கடும் உத்தரவு

ஃசஃப்பாரி வழிகாட்டுதல் இன்றி எந்தவொரு தேசிய பூங்காவிற்குள்ளும் தனியார் வாகனங்கள் உட்பிரவேசிக்க தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



யால சரணாலயத்திற்குள் உட்பிரவேசித்து விலங்குகளுக்கு சிலர் இடையூறு விளைவித்த சம்பவத்திற்கு பின்னர், இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், யால 06

# IMFக்கும் கடன் வழங்குனர்களுக்குமான அடுத்த கட்ட பேச்சு நவம்பர் 03இல்

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் தீர்மானம்

இலங்கையின் கடன் வழங்குனர்களுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நவம்பர் 03 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் மூவரடங்கிய குழுவுக்குமிடையே விசேட சந்திப்பொன்று (27) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 06



## நடத்துனர் இன்றி இயங்கும் அதிநவீன பயணிகள் பஸ் சேவை

விரைவில் கொழும்பு மாநகரில் ஆரம்பம்



பொது போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடத்துனர் இன்றி இயங்கும் அதிநவீன பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான திட்டம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கும் தனியார் தொழில்நுட்ப குழுவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. 06

மாகாண சபை தேர்தலை விரைவுபடுத்த

## தமிழ் தரப்புகளை ஒன்றுபட அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

அரசியல் சூழலை சரியாக பயன்படுத்தவும் கோரிக்கை

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை விரைவுபடுத்தும் நோக்கில் தமிழ் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார். இதன்மூலம் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவுபடுத்த 06






## சிறுவர்கள் மத்தியில் வேகமாக பரவிவரும் 'இன்புளுவன்சா'

பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் எச்சரிக்கை

03

## GCE (O/L) பரீட்சை முடிவுகள் நவம்பர் 25ற்குப் பின்னர்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதியின் பின்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம். டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

பரீட்சை விடைத்தாள்களை பரிசீலிக்கும் செயற்பாடுகள் நிறைவடைந்து வருவதால் நவம்பர் 25ஆம் திகதிக்குப் பின்னர் அதனை வெளியிட முடியும் என்றும் 06

## இனப்படுகொலை ஒன்று இடம்பெறவில்லையா?

கட்டுண்டலவின் கருத்துக்கு சிறிதரன் எம்பி கண்டனம்

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்றும், காணாமற்போனோர், சரணடைந்தோர் என எவரும் இங்கில்லை என்றும் காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுண்டல கூறியுள்ள கருத்து 06



## சிறுவர், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகரிப்பு

ஒன்பது மாதங்களில் 1500 முறைப்பாடுகள் பதிவு

இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்குள் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுகள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் உட்பட கிட்டத்தட்ட 1,500 பாலியல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும் 06

## சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சடிக்கும் பணி விரைவில்

போக்குவரத்து திணைக்களம் தெரிவிப்பு

அடுத்த வாரம் முதல் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சடிக்கும் பணியை ஆரம்பிக்கவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.



அடுத்த வாரம் ஜேர்மனியில் இருந்து 5 இலட்சம் அட்டைகள் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நிஷாந்த வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். 06

## எனக்கு எந்தவிதமான பயணத் தடையும் இல்லை

தவறான தொடர்பாடலாலேயே சிக்கல்

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கணினி வலையமைப்பில் ஏற்பட்ட முறைமை பிழையினால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று 06



நீதிமன்ற தடையை மீறியதால்

## விமான நிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்ட ரஞ்சன்



வெளிநாடு செல்வதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, குடிவரவு – குடியகல்வு அதிகாரிகளால் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். கத்தார் எயார்வேஸ் விமானமொன்றின் 06

## பெற்றோலிய திருத்த சட்டம் நடைமுறையில் உள்ளது

ஒக்.26 முதல் அமுல் என்கிறார் –கஞ்சன



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பெற்றோலிய பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர 06

## பஸ் கட்டணங்கள் விரைவில் குறையும்

அமைச்சர் கெஹெலிய தெரிவிப்பு

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாக, பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்லும் 06



## தாய் இறந்த சோகத்தில் மகன் உயிர் மாய்ப்பு

யாழ். நெல்லியடியில் சோக சம்பவம்

யாழ்.விசேட நிருபர்

தாய் இறந்த சோகத்தில் மகன் தனது உயிரை மாய்த்துக்கொண்ட சோக சம்பவம் யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் இடம்பெற்றுள்ளது. யாழ். நெல்லியடி கொற்றாவத்தை 06



90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## பிரதமர் மோடிக்கு சீக் சமூகம் நன்றி



கோவிந்காட்டில் இருந்து ஹெம்குன்த் சாஹிப் வரை ரோப்வே திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளித்ததற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தேசிய சிறுபான்மை ஆணைக்குழுவின் தலைவர் இக்பால் சிங் லால்பூரா நன்றி தெரிவித்துள்ளார்.

"சீக் சமூகத்தின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றி, நரேந்திர மோடி மீண்டும் ஒருமுறை இந்த சமூகத்துடன் இருக்கும் அன்பை வெளிப்படுத்தி உள்ளார். பிரதமர் தம்மில் ஒருவர் என்று சீக் சமூக உணர்கின்றனர்" என்று லால்பூர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ரோப்வே திட்டத்தின் மூலம் பயணத் தூரம் 45 நிமிடங்கள் குறைகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் புதிய அமெ. துணை தூதரகங்கள் தேவை



ஊடக செய்திகளால் பின்வாங்குவதை விட கள நிலவரத்தை அறிந்து 1.4 பில்லியன் மக்கள் தொகை கொண்ட ஒரு நாடாக இந்தியாவில் அமெரிக்க துணைத் தூதரகங்களை திறக்கும் தேவை இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க தொழில் முயற்சியாளர் நிறுவனத்தின் மூத்த உறுப்பினரான மைக்கல் ருபின், தி நசெனல் இன்டெரஸ்ட்டுக்கு எழுதி இருப்பதாவது, அமெரிக்க இராஜதந்திரிகள் இந்திய பத்திரிகைகள் அல்லது தொலைக்காட்சி விவாதங்களை பார்க்க முடியும், நிலையான இருப்பு ஒன்று இன்றி முக்கிய பிராந்தியத்தில் போதுமான தகவல்களை மேம்படுத்துவது சாத்தியமில்லை என்கிறார். புது டெல்லியில் இருக்கும் அமெரிக்க தூதரகத்திற்கு வெளியில் நாட்டில் நான்கு துணைத் தூதரகங்களே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தலிபான்களின் பெண்கள் அடக்குமுறைக்கு எதிர்ப்பு



தலிபான்களால் ஆப்கானிய பெண்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் குறித்து அமெரிக்காவைத் தளமாகக் கொண்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தலிபான்களின் துஷ்பிரயோகங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஆப்கானிய பெண்கள் பல்வேறுபட்ட துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக அவர்களது அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய பல பெண்கள் அவர்களது குடும்பத்தினருடன் தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலிபான்கள் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கும் கடும் அடக்குமுறைகளை இந்த அறிக்கை வெளிப்படுத்தி நிற்பதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# ட்விட்டரை கைப்பற்றினார் மஸ்க்



உலகின் பெரும் செல்வந்தரான இலோன் மஸ்க் 44 பில்லியன் டொலருக்கு ட்விட்டர் சமூகதளத்தை வாங்குவதை பூர்த்தி செய்திருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் மற்றும் அந்த நிறுவனத்தின் முதலீட்டாளர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டதை குறிக்கும் வகையில் மஸ்க், "பறவை விடுவிக்கப்பட்டது" என்று ட்விட் செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ட்விட்டர் தலைவர் பரக் அக்ரவால் உட்பட பல நிறைவேற்று உறுப்பினர்களும் அதிரடியாக நீக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் ட்விட்டர் மற்றும் மஸ்க்கிற்கு இடையிலான மோதல் முடிவுக்கு வந்துள்ளது. பல பில்லியன் டொலருக்கு ட்விட்டரை வாங்க சில மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்தம் செய்த மஸ்க், அதில் இருந்து வெளியேற முயன்ற நிலையில் ட்விட்டர் நிறுவனம் நீதிமன்றம் சென்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் நிறுவனத்தை மஸ்க் கையகப்படுத்தியதை ட்விட்டர் இன்னும் உறுதி செய்யாதபோதும், உடன்படிக்கை நிறைவு செய்யப்பட்டது என்று நிறுனத்தின் முதலீட்டாளர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

கருத்துச் சுதந்திர தொடர்பில் தனித்துவ எண்ணத்தை கொண்டவர் என கருதப்படும் மஸ்க், ட்விட்டரின் மிதவாத கொள்கைகளை விமர்சித்து வந்தார். இந்நிலையில் அவர் ட்விட்டரை கைப்பற்றி இருப்பது ட்விட்டர் பயனர்கள் மற்றும் ஊழியர்களிடையே கலவையான உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் அமெரிக்க அரசியலில் வலதுசாரிகள் அக்ரவாலின் வெளியேற்றத்தை கொண்டாடுவார்கள். மிதவாதிகளான அக்ரவால் மற்றும் அவருக்கு முன்னர் இருந்த ஜன் டோர்சே பேச்சு சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதாக அவர்கள் கருதுகின்றனர்.

பழைமைவாதக் குரலை ட்விட்டர் ஒடுக்குவதாக வலதுசாரிகள் குற்றம்சாட்டியபோதும் ட்விட்டர் அதனை மறுத்து வருகிறது.

அக்ரவாலுடன் தலைமை நிதி அதிகாரி நெட் செகால் மற்றும் நிறுவனத்தின் சட்டம் மற்றும் கொள்கை நிர்வாகி விஜெய் கட்டே ஆகியோர் தொடர்ந்தும் ட்விட்டரில் இல்லை என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

உடன்படிக்கை பூர்த்தியானதை அடுத்து சான் பிரான்சிஸ்கோவில் இருக்கும் ட்விட்டர் தலைமையகத்தில் இருந்து அக்ரவால் மற்றும் செகால் இருவரும் வெளியேற்றப்பட்டனர் என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அக்ரவால், செகால் மற்றும் கட்டேவின் பங்களிப்புக்காக ட்விட்டர் இணை நிறுவனர் பிஸ்ஸ்டோன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த நவம்பர் தொடக்கம் ட்விட்டர் தலைவராக பணியாற்றிய பிரெட் டெய்லர், தொடர்ந்தும் தான் அந்தப் பதவியில் இல்லை என்று தனது லிங்க்ட்இன் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை ட்விட்டர் சமூக ஊடகத்தின் பங்குகள் இடைநிறுத்தப்பட்டதாக நியூயோர்க் பங்குச் சந்தை இணையதளம் குறிப்பிட்டுள்ளது.

மனிதாபிமானத்திற்கு உதவ தாம் சமூக ஊடகத்தை வாங்கியதாகவும் பொதுவான டிஜிட்டல் மையம் ஒன்றை கொண்டுவர விரும்புவதாகவும் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வெறுப்புப் பேச்சு மற்றும் தவறான தகவல்களை வழங்கியதற்காக ட்விட்டரில் தடை விதிக்கப்பட்ட பலரும் மீண்டும் அந்த சமூக ஊடகத்திற்கு திரும்ப வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீதான ட்விட்டர் தடையும் தொடர்ந்து நீடிக்கிறது. எனினும் இந்தத் தடை முட்டாள்தனமானது என்றும் மீளப்பெறப்பட வேண்டும் என்றும் மஸ்க் முன்னதாக கூறியிருந்தார்.

ட்விட்டர் பற்றிய தனது திட்டம் குறித்து பதிவிட்டிருந்த மஸ்க், அனைத்துக்குமான செயலியாக ட்விட்டரை மாற்றுவது பற்றி தெரிவித்தார்.

இது பெரும் வெற்றி அளித்திருக்கும் சீனாவின் செயலியான 'விசாட்' போக்கில் அமைய வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இவ்வாறான செயலி செய்தியிடல், சமூக ஊடகம், கொடுப்பனவுகள் மற்றும் உணவு கோரல்கள் உட்பட பல்வேறு சேவைகளை வழங்குவதாக அமையும்.

## உலகின் மிக அபாயகரமான தசாப்தம்: புட்டின் எச்சரிக்கை



இரண்டாம் உலகப் போர் முடிவுக்குப் பின்னர் உலகம் மிக அபாயகரமான தசாப்தத்தை எதிர்கொண்டிருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை விரிவான உரை ஒன்றை நிகழ்த்திய அவர், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை நியாயப்படுத்தியதோடு, இதனால் தமது நாடு சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

ரஷ்யாவில் இருந்து விலகிச் செல்ல மேற்குலகம் ரஷ்யாவுக்கு எதிரான அணு ஆயுத அச்சுறுத்தலை விடுப்பதாகவும் புட்டின் குறிப்பிட்டார். "உலக விவகாரங்களில் வரலாற்று ரீதியாக மேற்கின் பிளவுபடாத ஆதிக்க முடிவுக்கு வருகிறது" என்றும் சர்வதேச கொள்கை நிபுணர்களின் மாநாட்டில் உரையாற்றும்போது புட்டின் தெரிவித்தார்.

"நாம் வரலாற்று ரீதியாக எல்லை ஒன்றில் நின்றுகொண்டிருக்கிறோம்: மிக அபாயகரமான, எதிர்வுகூற முடியாத, அதேநேரம் இரண்டாம் உலகப் போர் முடிவின் பின்னராக முக்கியமான தசாப்தத்தை எதிர்கொண்டிருக்கிறோம்" என்று புட்டின் குறிப்பிட்டார்.

எனினும் புட்டினின் கருத்து புதிதல்ல என்றும் இது உக்ரைன் உட்பட அவரது மூலோபாயங்கள் மாறவில்லை என்பதை காட்டுவதாகவும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

## வட கொரியா இரு பலிஸ்டிக் ஏவுகணைகள் வீசி சோதனை



வட கொரியா தனது கிழக்கு கடற்கரைக்கு அப்பால் இரு குறுகிய தூர பலிஸ்டிக் ஏவுகணைகளை நேற்று வீசி இருப்பதாக தென் கொரிய கூட்டுப் படைத் தலைவர்கள் மற்றும் தேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

"கொங்வொன் மாகாணத்தில் டொங்கொன் பகுதியில் இருந்து (ஏவுகணைகள்) ஏவப்படுவதை அவதானித்ததாக கூட்டுப்படை தளபதிகள் தெரிவித்துள்ளனர்" என்று தென் கொரியாவின் யொஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

"தென் கொரிய இராணுவம் அமெரிக்காவோடு நெருங்கிய ஒத்துழைப்புடன் முழு தயார்நிலையை பேணி வருகிறது" என்று கூட்டுத் தளபதி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் வருடாந்த 12 நாள் இராணுவ ஒத்திகையின் இறுதி நாளிலேயே நேற்றைய ஏவுகணை வீச்சுகள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டின் இராணுவ ஒத்திகையில் கணிசமான துருப்புகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென் கொரியா மற்றும் அமெரிக்க படைகள் அடுத்த வாரம் வான் ஒத்திகை ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளன.

வட கொரியா இந்த ஆண்டில் இதுவரை 28 ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## திருநங்கை ஆர்வலரிடம் பிரபஞ்ச அழகி அமைப்பு

தாய்லந்தைச் சேர்ந்த தொழிலதிபரும் திருநங்கை ஆர்வலருமான சக்ரபோங் "அன்" சக்ரஜுதாதிப் பிரபஞ்ச அழகி அமைப்பை 20 மில்லியன் டொலருக்கு வாங்கியுள்ளார்.

திருநங்கையான அவர் ஜே.கே.என். கிளோபல் குழுமத்தின் தலைவராவார். அந்த நிறுவனம் பானங்கள், அழகுப் பொருட்கள், உள்ளடக்க விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.

அதன் பொருட்களை விளம்பரப்படுத்த பிரபஞ்ச அழகி பெயர் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் திருநங்கைகளின் உரிமைகளை ஊக்குவிப்பதற்காக லாப நோக்கமில்லா அமைப்பையும் நிறுவியுள்ளார்.

2015ஆம் ஆண்டிலிருந்து பிரபஞ்ச அழகி அமைப்பு ஐ.எம்.ஜி. வேர்ல்வைட் எல்.எல்.சி. நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

## தெற்கு பிலிப்பைன்சில் திடீர் வெள்ளத்தினால் 31 பேர் பலி



புயல் தாக்கிய தெற்கு பிலிப்பைன்சில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் குறைந்தது 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் புயலை அடுத்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் வேரோடு பிடுங்கப்பட்ட மரங்கள், பாறைகள் மற்றும் சேற்று மண் அடித்து வரப்பட்டுள்ளன. இதில் 300,000 மக்கள் வசிக்கும் கொடபாடோ நகர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

திடீரென வெள்ள நீர் உயர்ந்ததால் குடியிருப்பாளர்கள் பலரும் அதில் சிக்கியதாக பிராந்திய அரசுக்கான சிவில் பாதுகாப்புத் தலைவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

புயல் பாதிக்கப்பட்ட பகுதியில் உயிரிழப்பு எண்ணிக்கை முன்னர் 13 ஆக இருந்த நிலையில் அது 31 ஆக அதிகரித்துள்ளது. ரப்பர் படகுகளில் சென்ற குழுவினர் கூரைகள் மீது சிக்கி இருந்த குடியிருப்பாளர்களை மீட்டுள்ளனர்.

பிலிப்பைன்சில் ஒவ்வொரு ஆண்டிலும் சராசரியாக 20 புயல்கள் தாக்குவதோடு உயிரிழப்புகளும் இடம்பெறுகின்றன. காலநிலை மாற்றத்தால் புவி மேலும் வெப்படையும் சூழலில் இவ்வாறான புயல்கள் மேலும் தீவிரம் அடையும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

## விண்கல் செவ்வாயை தாக்கி பெரும் பள்ளம்



செவ்வாய் கிரகத்தில் இடம்பெற்ற விண்கல் தாக்குதல் மற்றும் அதனால் ஏற்பட்ட பாரிய பள்ளத்தை நாசா கண்டுபிடித்துள்ளது.

கடந்த ஆண்டு அதிவேகமாக வந்து தாக்கி இருக்கும் விண்கல்லினால் செவ்வாய் கிரகம் எங்கும் அதிர்வலையை ஏற்படுத்தி இருப்பதோடு சுமார் 500 அடி பள்ளம் ஒன்று உருவாகி இருப்பதாக விஞ்ஞானிகள் 'ஜெர்னல் சயன்ஸ்' சஞ்சிகைக்கு தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட 4 ரிச்டர் அளவு நில அதிர்வை விண்கல் தாக்கிய இடத்தில் இருந்து 2,200 மைல்களுக்கு அப்பால் இருக்கும் நாசாவின் இன்சைட் விண்கலம் உணர்ந்துள்ளது.

இந்நிலையில் புதிதாக உருவான பள்ளத்தின் படத்தை செவ்வாயை வலம்வரும் நாசாவின் மற்றொரு விண்கலம் படம் பிடித்த பின்னரே இந்த அதிர்வுக்கான காரணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செவ்வாயை தாக்கி இருக்கும் விண்கல் 16 தொடக்கம் 30 அடி பரப்புக் கொண்டது என்றும் இது பூமியை தாக்க வந்தால் வளிமண்டலத்திலேயே சிதைந்துவிடும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## எரிவாயு வளத்தை பகிர்வதற்கு இஸ்ரேல்–லெபனான் ஒப்பந்தம்



இஸ்ரேல் மற்றும் லெபனான் தனது மத்தியதரைக் கடல் எல்லைகளை நிர்ணயிக்கும் வரலாற்று முக்கியம் வாய்ந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்டது தொடக்கம் இந்த இரு தரப்பும் போர் சூழலில் இருந்து வரும் நிலையில் எரிவாயு தளம் ஒன்றின் உரிமைக்காக பிரச்சினைப்பட்டு வந்தன.

உடன்படிக்கை ஒன்றுக்கு முன்னர் எரிவாயு எடுத்தால் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம் என்று லெபனானின் சக்திவாய்ந்த ஆயுத மற்றும் அரசியல் குழுவான ஹிஸ்புல்லா எச்சரித்து வந்தது.

இந்நிலையில் எரிவாயு தளத்தில் இருந்து இரு நாடுகளும் பொருளாதார ரீதியில் பலன் பெறவுள்ளன.

இந்த உடன்படிக்கையில் 330 சதுர மைல் கடல் பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளது. எல்லைகள் பிரிப்பதில் இருந்த முரண்பாடு காரணமாக இந்த பகுதியில் உள்ள இயற்கை வளங்களை இரு நாடுகளும் பெற முடியுமாக ஒப்பந்தம் அமைந்துள்ளது.

எரிவாயு இருப்பது உறுதி செய்யப்பட்ட கரிஷ் பகுதியை இஸ்ரேலுக்கும் குவானா பகுதியை லெபனானுக்கும் வழங்க அமெரிக்காவின் மத்தியஸ்தத்திலான உடன்படிக்கையில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 29 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්


**தொழுகை நேரம்**

23 முதல் 31 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.41 |
| லுஹர் | 11.56 |
| அஸர் | 03.17 |
| மஃரிப் | 05.53 |
| இஷா | 07.04 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் அக்டோபர் 29

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | சுகம் |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பாராட்டு |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# "வெல்னஸ் விலேஜ்" திட்டத்தின் கீழ் பியகம வைத்தியசாலை அபிவிருத்தி



'ஆரோக்கியமான கிராமம்' திட்டத்தின் (Wellness Village) கீழ் பியகம வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான காணி சுவீகரிப்பு தொடர்பான கூட்டம் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவன் விஜேவர்தன தலைமையில் (27) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவுக்கமைய சுற்றுலாத்துறையில் "மெடிகல் டுவரிசம்" பிரிவை மேம்படுத்துவதை இலக்காக கொண்டு, 'வெல்னஸ் விலேஜ்' திட்டம் இலங்கையில் முதன்முறையாக

06

# அஞ்சல் திணைக்களத்தின் சேவைக்கட்டணம் அதிகரிப்பு

அஞ்சல் அலுவலகம் வாயிலாக செலுத்தப்படும் நீர் மற்றும் மின் கட்டணங்களுக்காக அஞ்சல் திணைக்களத்தால் வசூலிக்கப்படும் சேவை கட்டணம் 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சேவைக் கட்டண அதிகரிப்புக்கான சுற்று நிருபம் அனைத்து அஞ்சல் அலுவலக பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

முன்னதாக மின் மற்றும் நீர் கட்டணங்களுக்காக ஐந்து ரூபாய் மாத்திரமே அறவிடப்பட்ட நிலையில் தற்பொழுது 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 20 ரூபாய் அறவிடப்படுகின்றது. இலங்கை மின்சார சபையினால் இதுவரை அஞ்சல் திணைக்களத்திற்கு நூற்றுக்கு இரண்டு வீதம் செலுத்தப்பட்டு வந்தது.

தற்போது அந்த கட்டணத்தை நூற்றுக்கு ஒரு வீதமாக குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால், மின் பாவனையாளர்களிடமிருந்து சேவை கட்டணத்தை அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அஞ்சல் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அஞ்சல் அலுவலகங்களுக்கான தினசரி செலவினம் அதிகரித்தமையும் சேவை கட்டணத்தை அதிகரிப்பதற்கு காரணம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெள்ளிக்கிழமைகளில் சைக்கிளில் கடமைக்குச் செல்லும் செயற்திட்டம்

## அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உடல் ஆரோக்கியம் மற்றும் வீதிகளில் ஏற்படும் நெரிசல்களை தவிர்க்கும் வகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் பிரதி வெள்ளிக்கிழமையும் துவிச் சக்கர வண்டிகளில் கடமைக்கு வருவது தொடர்பான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலக நகர தினத்தையொட்டி அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் இதனை பின்பற்றும் வகையில் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

இந்த மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இதற்கான திட்டம் நடைமுறையிலிருக்கும் என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அடுத்த வெள்ளிக்கிழமை இந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் அதனையடுத்து அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் துவிச்சக்கர வண்டியில் சேவைகளுக்கு சமுகமளிக்கும் இந்த வேலைத் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் அதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது. பிரதான வீதிகளை பயன்படுத்தும் அதே வேளை, குறுக்கு வீதிகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கிலும் உடல் ஆரோக்கியம், வீதி நெரிசல்கள் ஆகியவற்றை தவிர்க்கும் ஒரு அம்சமாகவும் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக மேற்படி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# நெற் செய்கைக்கு 50 கிலோ யூரியா ரூ.10,000 க்கு வழங்க நடவடிக்கை

## 13,000 மெ.தொ. யூரியா நாட்டை வந்தடைந்தது



உலக வங்கியின் 110 மில்லியன் அமெரிக்க டொலர் துரிதக் கடன் திட்டத்தின் கீழ் 13,000 மெற்றிக் தொன் யூரியாவின் ஒரு பகுதி நேற்று (28) விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. இதன்படி நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 50 கிலோ நிறையுடைய யூரியா மூடையை 10,000 ரூபாவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலையீட்டில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்களின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்கள் பலவற்றின் நன்கொடைகளுக்கு மேலதிகமாகவே உலக

06

# ஜப்பான் 5.5 மில்.டொலர் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

## ஜப்பான் தூதுவர் அமைச்சர் கெஹெலியவிடம் கையளித்தார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கவனத்திற் கொண்டு ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு மேலும் ஒரு தொகை மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

5.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மேற்படி மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோசி ஹிடெகி சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் நேற்று கையளித்துள்ளார். மருத்துவ சிகிச்சை தரத்தை பலப்படுத்தவும் அது தொடர்பில் தயார் நிலையை உறுதிப்படுத்தவும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் ராகமை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு இந்த உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளன.

எம்.ஆர்.ஐ.சி ஸ்கேனர் இயந்திரம் உள்ளிட்ட நவீன மருத்துவ உபகரணங்களை ஜப்பான் இவ்வாறு வழங்கியுள்ளது. இந்த உபகரணங்கள் தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை பரிசோதிப்பதற்கும்

06

# சிறுவர்கள் மத்தியில் வேகமாக பரவிவரும் 'இன்புளுவன்சா'

## பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**




நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர்கள் மத்தியில் இன்புளுவன்சா நோய் பரவல் அதிகரித்து வருவதாகவும் அது தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், வாந்தி, தடிமன் ஆகியன இன்புளுவன்சாவுக்கான பிரதான அறிகுறிகள் என்பதை சுட்டிக் காட்டியுள்ள அவர், மழையுடனான சீரற்ற காலநிலை மற்றும் நிலவும் குளிரான சீதோஷ்ணம் காரணமாக இந்த நோய் பரவி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோய் அறிகுறிகளைக் கொண்ட பிள்ளைகளை பாடசாலைக்கோ அல்லது பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்களுக்கோ அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். இந்த நோய் அறிகுறிகள் குடும்பத்தில் அனைவருக்கும் பரவக் கூடிய வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ள அவர், எவ்வாறெனினும் சிறுவர்கள் மத்தியில் கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை பெருமளவு குறைவடைந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

### முப்படையினருக்கான
# பொது மன்னிப்பு காலம் அறிவிப்பு

**ஸாதிக் ஷிஹான்**

சட்டரீதியில் விலகாமல் படையிலிருந்து சென்ற முப்படை வீரர்கள் சட்ட ரீதியில் சேவையிலிருந்து விலகிக் கொள்வதற்கான பொது மன்னிப்பு காலத்தை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய 2022. 11. 15ஆம் திகதி முதல் 2022. 12. 31ஆம் திகதி வரையான காலத்தையே பொது மன்னிப்பு காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2022.10.25ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் சேவையிலிருந்து சட்டரீதியில் விலகாமல் படையிலிருந்து சென்ற முப்படை வீரர்கள் சேவையிலிருந்து உத்தியோகப்பூர்வமாக விலகிக் கொள்ள முடியும் என்றும் மேலும் ஏதேனும் செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம் அதை வெளியேற்றுவதற்கு முன்னர் செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மக்களை அவதானமாக இருக்க எச்சரிக்கை:
# நாட்டில் அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்கள்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தெரிவிப்பு



மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதிக்குள் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் வேன், மோட்டார் சைக்கிள், ஆட்டோ, லொறி, மற்றும் பஸ் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் 1406 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். குறித்த முறைப்பாடுகளில் முச்சக்கர வண்டிகள் கொள்ளைச்சம்பவம் தொடர்பில் 311 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# அரச நிறுவனங்களின் செயற்திறனை அளவிட பிரதான குறிகாட்டிகள் அறிமுகம்

## புதிய கொள்கை தயாரிக்க தேசிய சபையில் தீர்மானம்



அரச நிறுவனங்களின் செயற்திறனை அளவிடுவதற்கு பிரதான செயல்திறன் குறிகாட்டிகளை (KPIs / Key Performance Indicators) அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் (26) கூடிய குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய சபையின் உப குழுவில் இது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச பொறிமுறையை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் மாற்றுவதற்கு அரச நிறுவங்கள் மற்றும் அரச அதிகாரிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான அளவீடுகளை தயாரிக்கும் தேவை குறித்து குழுவில் வலியுறுத்தப்பட்டது. அதற்கமைய, நிர்வாக சேவை உள்ளிட்ட ஏனைய நாடு தழுவிய அனைத்து சேவைகளையும் இணைத்து எதிர்வரும் வாரத்தில் கலந்துரையாடி கொள்கைகளை தயாரிக்கும் பணிகளை ஆரம்பிக்க இங்கு தீர்மானிக்கப்பட்டது. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, இலங்கை நிர்வாக சேவை சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தி அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னிஆராச்சி, வஜிர அபேவர்தன மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 223.10 | 233.90 |
| கனடியன் டொலர் | 257.50 | 269.44 |
| யூரோ | 345.67 | 360.32 |
| ஜப்பான் யென் | 2.4481 | 2.5509 |
| சிங்கப்பூர் டொலர் | 247.77 | 258.33 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 394.42 | 410.24 |
| சுவிஸ் பிராங்க் | 355.17 | 372.22 |
| அமெரிக்க டொலர் | 359.23 | 369.96 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 961.64 | கட்டார் ரியால் | 99.31 |
| குவைத் டினார் | 1,168.79 | சவூதி ரியால் | 96.54 |
| ஓமான் ரியால் | 942.56 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்

நன்மை எது, தீமை எது என ஆராய்ந்து அறிந்த, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.

# போதைப்பொருள் குற்றங்களை ஒழிக்க தீவிர நடவடிக்கை தேவை

நாட்டில் போதைப்பொருள் கடத்தலையும் பாவனையையும் முடிவுக்குக் கொண்டு வருவதென்பது இலகுவான காரியமல்ல. போதைப்பொருளுக்கு எதிரான சட்டம் இலங்கையில் மிகக் கடுமையாக்கப்பட்டிருக்கின்றது. போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படுகின்ற தண்டனையும் மிகக் கடுமையானது. போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனையில் ஈடுபடுவோர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவர்களுக்கு நீதிமன்றங்களினால் ஆயுட்காலச்சிறைத் தண்டனையோ அல்லது மரணதண்டனையோ தீர்ப்பாக வழங்கப்படுவதையும் நாம் அறிகின்றோம்.

தண்டனைகள் கடுமையானதாக இருந்த போதிலும், போதைப்பொருள் சம்பந்தமான குற்றங்கள் இன்னுமே முடிவுக்கு வருவதாக இல்லை. போதைவஸ்து கடத்தல்களும் அதன் பாவனைகளும் இன்னும் முடிவின்றித் தொடர்ந்தபடியே உள்ளன. போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுவதும், குற்றவாளிகள் கைது செய்யப்படுவதும் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

கிழக்கின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் போதைப்பொருள் குற்றங்கள் அடிக்கடி இடம்பெறுவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. போதைப்பொருட்கள் அங்கு அடிக்கடி கைப்பற்றப்படுகின்றன. விற்பனையாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். நாட்டின் பல பிரதேசங்களில் இருந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பிரதேசங்களுக்கு போதைப்பொருட்கள் கடத்திச் செல்லப்படுவது தெரிய வந்துள்ளது.

அங்கு பொலிசார் மிகத்தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட்டு போதைப்பொருள் குற்றவாளிகள் பலரைக் கைது செய்துள்ளனர். ஆனாலும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது கடினமாகவே உள்ளது. பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கினாலேயே போதைப்பொருள் குற்றங்களை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென்பதுதான் உண்மை.

இது இவ்வாறிருக்கையில், நாட்டின் வடபகுதியில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் சமீப காலமாக போதைப்பொருள் குற்றங்கள் அதிகரித்து வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன. போதைப்பொருள் குற்றவாளிகள் சமீப காலமாக பெருமளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். பெண்ணொருவர் கூட போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்த சம்பவமொன்று கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது. வியாபார நோக்கத்துக்காகவே அப்பெண் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

இந்தியாவிலிருந்து கேரள கஞ்சா வடபகுதிக்கு கடத்தி வரப்படுகின்ற சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்ற நிலையில், தற்போது ஹெரோயின் போன்ற போதைப்பொருள் பாவனையும் வடக்கில் அதிகரித்து வருவது ஆரோக்கியமான நிலைமையல்ல. வடபகுதியில் போதைப்பொருள் பாவனையை அதிகரிப்பதற்கு திட்டமிட்ட முறையில் செயற்பாடுகள் இடம்பெறுவதாக பேச்சுகள் உலவி வருகின்றமை ஒருபுறமிருக்கையில், அவ்வாறான ஊகங்கள் கற்பனையென மற்றொரு தரப்பினர் கூறுவதையும் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

எதுவாக இருந்த போதிலும், வடபகுதியில் போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் சம்பவங்கள் இவ்வாறு அதிகரித்து வருவது அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்குத் தடையாகவே இருக்கப் போகின்றதென்பதை வடபகுதி நலனில் அக்கறை கொண்டவர்கள் புரிந்து கொள்வது அவசியம். வடபகுதியானது போதைப்பொருள் குற்றங்கள் நிறைந்த பிரதேசமாக மாறுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

கல்வியிலும் சுயபொருளாதார அபிவிருத்தியிலும் வடபகுதி மக்கள் ஆற்றலுள்ளவர்கள் என்ற பெருமை அக்காலத்தில் நிலவியது. கல்வித்துறையைப் பொறுத்தவரை குறுக்குவழிகளை நாடாமல் சொந்த முயற்சியிலேயே உச்சநிலைமையைத் தொடக் கூடிய ஆற்றலுள்ளவர்களாக அம்மக்கள் திகழ்ந்தனர். அதன் ஊடாக நாட்டின் உயர்பதவிகளையெல்லாம் அங்குள்ளோர் அலங்கரித்தனர்.

ஆனால் உள்நாட்டு யுத்தம் உருவெடுத்த பின்னர் வடபகுதியின் கல்வி மற்றும் சுயபொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது. முப்பது வருட காலமாக அழிவுகள் தொடர்ந்து சென்றமை ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், மறுபுறத்தில் புலம்பெயர்தலும் அதிகரித்துச் சென்றது. கல்வியிலும் பொருளாதாரத்திலும் எமது தாய்நாட்டுக்குப் பங்களிக்க வேண்டிய வடபகுதி மக்கள் பலர் புலம்பெயர் தேசங்களில் கல்வி மற்றும் பொருளாதாரத்துறைகளில் அந்நாடுகளுக்குப் பங்களித்துக் கொண்டிருக்கின்றனர்.

எமது தாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பாகவே இதனைக் கருத முடியும். ஆனாலும் யுத்தம் எப்போதோ முடிவுக்கு வந்து விட்டது. வடபகுதி மக்கள் மீண்டும் தங்களது கல்வியிலும் பொருளாதாரத்திலும் வேகமாக முன்னேறிச் செல்ல வேண்டிய வேளையும் திரும்பி விட்டது. எனினும் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் வடபகுதி நிலைமை முன்னேற்றமடையவில்லையென்பதே உண்மை.

தமிழ்த்தரப்பு அரசியல்வாதிகளிடையேயான ஒற்றுமையின்மை மற்றும் நவீன கலாசாரங்களின் ஊடுருவல் காரணமாக வடக்கு நிலைமை பிறழ்வான திசையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. கல்வித்துறையில் வீழ்ச்சி காணப்படுகின்றது. சுயபொருளாதார அபிவிருத்தியும் குறிப்பிடும்படியாக இல்லை. இந்நிலையில் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து வருவது ஆபத்தான அறிகுறியாகும்.

வடபகுதியில் பொலிசார் மேற்கொள்கின்ற போதைப்பொருள் வேட்டைக்கு பொதுமக்கள் ஆதரவு வழங்குவது அவசியம். அதேவேளை சமூகமட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதும் அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# அனுராதபுரம் புராதன நகரை தூய்மைப்படுத்தும் திட்டம்



இலங்கையில் நிலைபேண்தகு கழிவு முகாமைத்துவத்தின் முன்னோடியான INSEE Ecocycle இனால் இரண்டாவது நகரத்தை சுத்தப்படுத்தும் வர்த்தக சமூக பொறுப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் அனுராதபுரத்தின் பண்டைய நகரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. அனுராதபுரம் மாநகர முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளர், ஏனைய உறுப்பினர்கள், பிரதம மருத்துவ அதிகாரி, தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அங்கத்தவர்கள் மற்றும் Ecocycle அணி உட்பட 100 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

2019 முதல் INSEE Ecocycle அனுராதபுரத்தில் தரம் பிரிக்கப்பட்ட மீள்சுழற்சி செய்ய முடியாத மற்றும் உக்காத மாநகர திண்மக்கழிவுகளுக்கு நிலைபேண்தகு தீர்வுகளை வழங்கி வந்துள்ளது. இதன் மூலமாக 1300 மெட்ரிக் தொன் அளவுக்கும் மேற்பட்ட மாநகர திண்மக் கழிவுகளை அகற்றியுள்ளது. நகரத்தைச் சுத்தமாக வைத்திருக்க, Ecocycle அனுராதபுரம் நகர சுத்தம் செய்யும் முயற்சி அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புடன் 2020 இல் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு இணையாக அனுராதபுரம் நகர சுத்தப்படுத்தும் திட்டத்திற்கு பங்களிக்க முன்வந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், எதிர்கால இளம் தலைவர்களுக்கு நிலைபேண்தகு கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் குறித்து கற்பிக்கும் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

அனுராதபுரம் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் இது சம்பந்தமான தேர்ச்சி மீளாய்வு மாநாடு ஒன்றும் நடத்தப்பட்டு, நகரத்திற்கான மொத்த



கழிவுத் தீர்வுகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி ஆராயப்பட்டது. அடுத்த முயற்சி நீண்ட கால இலத்திரனியல் கழிவு முகாமைத்துவத் திட்டமாக இருக்கும்.

இந்நிகழ்வில் INSEE Ecocycle Lanka இன் பணிப்பாளரான சஞ்சீவ சூலகுமார கருத்து வெளியிடுகையில், “அனுராதபுரம் மாநகர சபை மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து, 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் அங்கம் வகிப்பதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த பண்டைய நகரத்தை தூய்மையாக நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். இந்த வகையான வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கும் மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான தொடர்ச்சியான தீர்வுகளை வழங்குவதற்கும் இந்த அரசதனியார் உறவை மேலும் வலுப்படுத்துவோம். இதை ஒரு தேசிய கட்டாய தேவையாக நாங்கள் கருதுகிறோம்” என்றார்.

“INSEE Ecocycle ஆனது 2011 ஆம் ஆண்டு முதல் கம்பஹா மற்றும் குருநாகல் பிரதேசங்களில் தொடங்கி, நாட்டின் மாநகர சபை திண்க்கழிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உதவி வருகிறது. Ecocycle கூட்டாண்மையானது INSEE தலைமையிலான ஒரு பெரிய அளவிலான ஒத்துழைப்பாக வளர்ந்துள்ளது. மேற்கு, வடமேற்கு, மத்திய, வடமத்திய, தெற்கு, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்கள் உட்பட 07 மாகாணங்களை உள்ளடக்கியவாறு, மாகாண அதிகார சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் ஏனைய விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் தயாரிப்பு பெருநிறுவனங்களும் 120 க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன” என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நிலைபேண்தகு கழிவு முகாமைத்துவத்தின் கீழ் INSEE Ecocycle மற்றும் அனுராதபுரம் மாநகர சபை இணைந்து முன்னெடுப்பு



# கபில்வத்தை கங்கையில் மரகதலிங்க அபிஷேகம்!

தீபாவளியை முன்னிட்டு சித்தர்கள் குரல் அமைப்பினர் மொனராகலையை அடுத்துள்ள அடர்ந்த கபிலவனத்தை ஊடறுத்து செல்கின்ற கபிலவத்தை கங்கையில், மரகதலிங்கத்திற்கு சிறப்பான அபிஷேகத்தை மேற்கொண்டனர்.

‘சித்தர்கள் குரல்’ அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் ஒருமணி நேரம் பால், பழம், தயிர், விபூதி, சந்தனம், குங்குமம் போன்ற திரவியங்களால் அபிஷேக வழிபாட்டில் ஈடுபட்டனர்.

‘ஆதி கதிர்காமம்’ என அழைக்கப்படும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கபிலவத்தையில், ஷப்தகன்னியர்கள் உறைந்த கபிலவத்தை கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் நடைபெற்றது.

"ஹரஹரமகாதேவா சம்போமஹாதேவா" என்ற சுலோகம் விண்ணைத் தொடும் வண்ணம் பக்தர்கள் உரத்து ஒலி எழுப்பியபோது, எங்கிருந்தோ பறந்து வந்த மயில் அபிஷேகம் இடம்பெற்ற சூழலில் வந்து நீண்ட தூரம் நடந்து உலாவிக் கொண்டிருந்தது.

அனைவரும் ஆச்சரியத்துடன் பிரமித்துப் போனார்கள்.

ஆஸ்தான இருந்து சிவஷங்கர் ஜீ கூறுகையில் "என்னுடைய கடந்த பன்னிரண்டு வருட கால அனுபவத்தில் இப்படி மயில் நேரடியாக அபிஷேக நேரத்தில் வந்து ஆசீர்வதித்தது கிடையாது. எமது அபிஷேக வழிபாட்டை முருகப்பெருமான் ஏற்றுள்ளார் என்பதனை அவரது வாகனமான மயில் மூலம் சூட்சுமமாக உணர்த்தியுள்ளது. இது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது" என்றார். 28 பேரடங்கிய குழுவினர் சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர்ஜியின் முறையான நெறிப்படுத்தலில் ஒவ்வொருவருக்கும் அபிஷேகம் இடம்பெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் பங்களிப்பில் நடைபெற்ற இவ் வழிபாட்டில் பிரபல நாதஸ்வர வித்துவான் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பாலகுமாரன், காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான தவிசாளரும் தர்மகத்தாவுமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கல்வியியலாளர் வி.ரி.சகாதேவராஜா, திருகோணமலை பிரகாஷ் ஆசிரியர், கனடா அன்பர் குமார் உள்ளிட்ட பிரமுகர்களும் அபிஷேகத்தில் ஈடுபட்டனர். பங்கேற்ற பக்தர்களுக்கு இது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.





## மயில் வந்து நடனமாடியதால் பக்தர்கள் வியப்பு!





(காரைதீவு குறூப் நிருபர்)

# பண்ணிசை, பரதநாட்டியம் உள்ளிட்ட கற்கைநெறிகளுக்கு வித்தியாரம்பம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த வித்தியாரம்பம் சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார கற்கை நிறுவகத்தின் சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையத்தினால் அடிப்படை சான்றிதழ் பயிற்சிகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வு இடம்பெற்றமை விஷேட அம்சமாகும்.

பண்ணிசை, பரதநாட்டியம், கதாப்பிரசங்கம் வயலின் ,வீணை, சொற்பொழிவு ஆகிய கலைப் பயிற்சி வகுப்புகளுக்கான வித்தியாரம்பம் விபுலானந்த அடிகளாரின் மணி மண்டபத்தில் அந்தந்த வளவாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.







பெருந்திரளான மாணவர்கள் இக்கலைப் பயிற்சி வகுப்புகளில் பயில ஆர்வத்துடன் இணைந்ததைக் காணமுடிந்தது. இறுதிப்பூசை நிகழ்வுகள் இந்து கலாசார உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டிருந்தார்.

வி.ரி.சகாதேவராஜா...

# உலக நாடுகளுடன் இணைந்து பயணம் செய்வதில் இந்தியாவின் உறுதிப்பாடு

உலக நாடுகளுடன் இந்தியா எப்போதும் இணைந்தவாறே பயணம் செய்யுமென்று அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். உலக நாடுகளுடன் நல்லிணக்கத்துடன் இணைந்து செயலாற்றுவதென்ற இந்தியாவின் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் ஜெய்சங்கர் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இம்மாதம் (ஒக்டோபர்) 24ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகள் தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. அது தொடர்பாக அறிக்கையொன்றை பதிவு செய்துள்ளார் அவர். அப்பதிவில் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியா எப்போதும் உலகளாவிய இணக்கப்பாட்டுடன் செயற்படவே விரும்புகின்றது.



அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் செயல்திறனை வலுப்படுத்த இந்தியா முயற்சிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் தனது 11 நாள் அமெரிக்கப் பயணத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியாவின் நலன்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தியிருந்தார். அத்துடன் ஐ.நாவின் சீர்திருத்தங்கள், இந்தியா கொண்டுள்ள உலகளாவிய அக்கறை ஆகிய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தியிருந்தார்.

"சீர்திருத்தப்பட்ட பன்முகத் தன்மை, சட்டத்தின் ஆட்சி மற்றும் நியாயமான, சமமான சர்வதேச அமைப்பு ஆகியவற்றில் எங்கள் கவனம் உள்ளது. ஐ.நா.வின் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தியா செயற்பட்டு வருகின்றது" என்று ஜெய்சங்கர் மேலும் கூறினார்.

"ஐ.நா.வின் ஸ்தாபக உறுப்பினராக செயற்பட்டு வருகின்ற



## ஐ.நாவின் தீர்மானங்களின்படி செயற்படுவதில் அக்கறை

இந்தியா, தனது நோக்கங்கள் மற்றும் கொள்கைகளில் தொடர்ந்தும் உறுதியாகவே உள்ளது. ஐக்கிய நாடுகள் சாசனத்தின் இலக்குகளை செயற்படுத்துவதில் இந்தியாவின் பங்களிப்புகள் இந்த அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த மாதம் அமெரிக்காவுக்கு மேற்கொண்டிருந்த பதினொரு நாள் பயணத்தின் போது, உலகளாவிய நலன்கள் மீதான அக்கறையை பாதிக்கின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

வோஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், "இது ஐ.நா. உறுப்பினர்கள் செய்ய வேண்டிய கூட்டு முயற்சி என்று நான் நினைக்கிறேன். சீர்திருத்த முயற்சிக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்து வருகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் தினம், ஒக்டோபர் 24 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சாசனம் 1945 இல் நடைமுறைக்கு வந்த ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதத்தில் மேற்படி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பாதுகாப்பு கவுன்சிலின் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் உட்பட, கையொப்பமிட்ட பெரும்பான்மையான நாடுகளால் இந்த ஸ்தாபக ஆவணத்தின் ஒப்புதலுடன், ஐக்கிய நாடுகள் சபை அதிகாரபூர்வமாக உருவானது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பல்நோக்கு கொண்ட இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் மீளாய்வு செய்வதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் விரைவில் வொஷிங்டன் பயணமாகவுள்ளார். இவ்விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மூலோபாய ரீதியாக இறுக்கமடையச் செய்யும் என இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. சபையின் 17 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நியூயோர்க் சென்றிருந்த வேளையில் பன்னாட்டு தலைவர்களையும் வெளிவிவகார அமைச்சர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரசை சந்தித்து ஜி 20 மாநாடு, காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, உக்ரைன் யுத்தம் போன்ற உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக தனது ட்விட்டர் பக்கத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சேர்ஜி லவ்ரோவை சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தியதுடன், ஆர்மீனிய வெளியுறவு அமைச்சரை சந்தித்து சமீபத்திய உலக விவகாரங்கள் குறித்து விவாதித்திருந்தார்.

(எஸ்.எஸ்)

# திருக்கோணேஸ்வரர் ஆலய பிரதேசத்தில் ஆக்கிரமிப்பு தடுத்து நிறுத்தப்பட வேண்டும்



## கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்

தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கை உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 55 ஆவது மாதாந்த பொதுச்சபை அமர்வு கடந்த புதன்கிழமை (26) பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற நிலையில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், ஹென்றி மகேந்திரன் இருவர் இணைந்து முன்வைத்த கண்டனப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதே கட்சியை சேர்ந்த உறுப்பினரான எம்.குபேரன் வழிமொழிந்து உரையாற்றினர்.

இதன்போது திருகோணமலையில் அமைந்துள்ள தமிழர்களின் பாரம்பரிய வணக்கஸ்தலமான திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வையில் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதாகவும் அங்கு வழிபாடுகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகவும் அந்த ஆலய வளாகத்தை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் பேரினவாத சக்திகளின் பின்புலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள், இச்செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாகவும் குறிப்பிட்டனர்.

காலத்திற்கு காலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மதஸ்தலங்களும் பூர்வீகக் காணிகளும் குடியிருப்பு நிலங்களும் பல்வேறு வகையிலும் இவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகின்ற திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக சிறுபான்மையினர் ஒன்றிணைந்து குரல் எழுப்பி, முறியடிக்க முன்வர வேண்டும் எனவும் உறுப்பினர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

அதேவேளை,நல்லாட்சி அரசாங்க காலத்தில் அம்பாறை இறக்காமம் பிரதேசத்தில் முஸ்லிம்களின் பள்ளிவாசல் சிங்கள மக்களினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட போது த.தே.கூ தலைவர் சம்பந்தன் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி அந்த ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தியிருந்தார். அதே போன்று தமிழ் மக்களின் ஆலயம் மற்றும் நில ஆக்கிரமிப்பிற்கு முஸ்லிம் கட்சிகள் தலையிடுவதில்லை எனவும், இனிவரும் காலங்களில் அவ்வாறு இன்றி தமிழர்களுக்காக முஸ்லிம் கட்சிகள் குரல் கொடுக்க வேண்டும் எனவும் சந்திரசேகரம் ராஜன் சபையில் உரையாற்றினார்.

மேலும் திருக்கோணேஸ்வரர் ஆலய விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக தலையிட்டு, ஆலய ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதுடன் அதன் சுதந்திரமான செயற்பாடுகளையும் இருப்பையும் உறுதிப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று கல்முனை மாநகர சபை வலியுறுத்தும் பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவளித்து, எமது ஒற்றுமையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவோம் என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவர்களது உரைகளைத் தொடர்ந்து இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன், இதனை ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைப்பதென தீர்மானிக்கப்பட்டது.







கஜனா சந்திரபோஸ்...

## மெல்பனில் நாளை இலக்கிய சந்திப்பு;

# ஸ்ரீரஞ்சனியின் 'ஒன்றே வேறே' புதிய கதைத்தொகுதி வெளியீடு

கனடாவில் வதியும் எழுத்தாளரும் ஆசிரியருமான ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா அவுஸ்திரேலியா வருகை தருகிறார். ஸ்ரீரஞ்சனியுடனான இலக்கிய சந்திப்பும், அவரது புதிய சிறுகதைத் தொகுதி 'ஒன்றே வேறே' நூலின் அறிமுக அரங்கும் மெல்பனில் நாளை 30 ஆம் திகதி (30102022) ஞாயிற்றுக்கிழமை மாலை 400 மணிக்கு அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.







சங்கத்தின் தலைவர் எழுத்தாளர் திருமதி சகுந்தலா கணநாதன் தலைமையில் மெல்பனில் வேர்மன் தெற்கு சமூக இல்லத்தில் (Vermont South Community House–Karo bran Drive, Vermont South, Vic–3133 ) நிகழ்வு நடைபெறும்.

இலங்கை மகுடம் பதிப்பகத்தின் வெளியீடாக வரவாகியிருக்கும் ஶ்ரீரஞ்சனியின் 'ஒன்றே வேறே' கதைத் தொகுதியின் வாசிப்பு அனுபவம் சார்ந்த தமது நயப்புரைகளை மெல்பன் வாசகர் வட்டத்தைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலர்கள் பாலசந்தர் சௌந்தர பாண்டியன், திருமதி கலாதேவி பாலசண்முகன் ஆகியோர் சமர்ப்பிப்பர்.



இலங்கையில் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பின்னர் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருக்கும் ஸ்ரீரஞ்சனி, இலங்கையில் பேராதனை பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாவர். கொழும்பில் உயர்தரக்கல்லூரி ஒன்றில் விஞ்ஞான பாட ஆசிரியராகவும் பணியாற்றியவர். இலங்கை, தமிழக மற்றும் புகலிட தேசத்து இதழ்களிலும் சிறுகதைகளை எழுதி வருபவர்.

ஸ்ரீரஞ்சனியின் 'நான் நிழலானால்' கதைத் தொகுதி 2010 ஆம் ஆண்டிலும், 'உதிர்தலில்லை இனி' என்ற கதைத்தொகுதி 2018 ஆம் ஆண்டிலும் வெளிவந்தவையாகும்.

பத்திரிகைகள், இதழ்களில் எழுதிய உளவியல் சார்ந்த கட்டுரைகள் சிலவற்றை தொகுத்து 'பின்தொடரும் குரல்' என்ற நூலையும் முன்னர் வரவாக்கியுள்ளார்.

லெ.முருகபூபதி...
அவுஸ்திரேலியா

## மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ்;

# மில்லேனியல்களுக்கான சிறந்த பணியிடங்களில் ஒன்றாக Great Place to work இன் அங்கீகாரம்

உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களில் ஒன்றான மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட், 2022 ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள மில்லேனியம் தலைமுறையினருக்கான (Millennials) 15 சிறந்த பணியிடங்களில் ஒன்றாக, Great Place to Work ஆல் தரவரிசைப்படுத்தப்பட்டதால், விருப்பத்திற்குரிய தொழில் தருநராக இருப்பதற்கான தனது பயணத்தில் மற்றொரு சாதனையை நிலைநாட்டியுள்ளது.



மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ், நிதிச் சேவைகள் துறையில் தொழில்வாய்ப்பைக் கட்டியெழுப்ப விரும்பும் இளம் தொழில் வல்லுநர்களுக்கு விருப்பத்திற்குரிய தொழில் வழங்குநராக இருக்கும் நிறுவனமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள கடினமாக உழைத்து வருகிறது. 2022 செப்டெம்பர் 6 ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இலங்கைக்கான Great Place to Work விருது வழங்கும் நிகழ்வில் மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த பாராட்டு அங்கீகாரத்தைப் பெற்றதில் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரியான துமிந்த வீரசேகர, "2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையில் 15 Best Workplaces for Millennials□ என்ற சிறந்த பணியிடங்களில் தரவரிசைப்படுத்தப்படுவது எமக்கு கிடைக்கப்பெற்ற ஒரு பாக்கியம். எங்கள் இளம் அணியை புடம்போட்டு வளர்ப்பதில் நாம் காண்பிக்கும் அக்கறை, வெளிப்புற சவால்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து இதனை முன்னெடுத்துச் செல்லும் எமது அர்ப்பணிப்பு ஆகியன இதன் மூலமாகஅங்கீகரிக்கப்பட்டுள்ளன" என்றார்.

Best Workplaces for Millennials in Sri Lanka 2022 இற்கான Great Place to Work பட்டியல் கடுமையான 2 அடுக்கு Trust Index ஊழியர் கருத்துக்கணிப்பு மற்றும் Culture Audit பணியாளர் நடைமுறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. 2021 ஜூலை முதல் 2022 ஜூன் வரை இலங்கையில் உள்ள 160 க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் ஊழியர்களின் 85% மறுமொழி வீதத்தில் 72,350 பணியாளர்களை மதிப்பீடு செய்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஒத்துழைப்பு, வேலைகுடும்ப வாழ்க்கை சமநிலை, வயது அடிப்படையில் பாகுபாடின்மை, அர்த்தமுள்ள வேலை, மாற்றத்தை ஏற்படுத்துதல், சமுதாயத்திற்கு பங்களிப்பு செய்தல் மற்றும் நிறுவனத்தில் பெருமை சேர்த்தல், மில்லேனியல்களால் மதிப்புமிக்கதாகக் கருதப்படும் பண்புக்கூறுகள் ஆகியவற்றில் அதிக மதிப்பெண் பெற்ற நிறுவனங்கள் பட்டியலில் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளன.

Great Place to Work ஆனது இலங்கை உட்பட 100 க்கும் மேற்பட்ட பிராந்தியங்களை உள்ளடக்கிய 90 க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள வணிகங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு நிர்வாக ஆலோசனை மற்றும் கலாசார ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

www.greatplacetowork.lk அல்லது www.greatplacetowork.com மூலம் Great Place to Work ஐப் பின்தொடர முடியும்.

## 40 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க

# வரி அறவிடுவதைத் தவிர அரசுக்கு வேறு வழிகளில்லை

### - நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் நிவாரணங்களை வழங்க வேண்டியுள்ளதால் அந்த அதற்காக வரி அறவிடுவதை தவிர வேறு வழிகள் கிடையாதென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் 68 இலட்சம் குடும்பங்கள் உள்ளன. இதில் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரணங்களை கோரியுள்ளன. அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு வரி வருமானம் அவசியமாகிறதென்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போது நாட்டிலுள்ள 18 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தி உதவியையும் 04 இலட்சத்து 16 ஆயிரத்துக்குமதிகமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முதியோருக்கான கொடுப்பனவையும் பெறுகின்றனர். அது தவிர விசேட தேவையுடையோர் மற்றும் ஏனைய நிவாரணங்களை பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

உதவிகளை அல்லது நிவாரணங்களை பெற்றுக் கொள்ளும் பட்டியலில் மேலதிகமாகவும் பெரும்பாலானோர் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் யார் எத்தகைய விமர்சனங்களை முன்னெடுத்தாலும் வரி அறவீடுகள் மூலமே இத்தகைய கொடுப்பனவுகளை வழங்க முடியுமென்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய பாடசாலைகளுக்கு...

எதிர்காலத்தில் எதுவும் இருக்காது. கல்வி அமைச்சில் நிறுவப்பட்ட தேசிய கல்வி சீர்திருத்த மையம் (NERC) மற்றும் மாகாண கல்வி சீர்திருத்த மையங்கள் (PERC) ஊடாக கல்வி நிர்வாக மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ் இந்த முதன்மையான பாடசாலை கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசியப் பாடசாலைகள் மற்றும் பிற பாடசாலைகளும் இந்தக் கொத்தணி பாடசாலை செயற்திட்டத்தில் (Lead School) முன்னணிப் பாடசாலையாக மாற வாய்ப்புள்ளது, மேலும் கொத்தணி பாடசாலை கருத்திட்டம் ஆரம்ப பாடசாலைகள், கனிஷ்ட மேல்நிலை பாடசாலைகள், சிரேஷ்ட மேல்நிலை பாடசாலைகள் என பாடசாலைகள் பொதுவான முறையான வகைப்பாட்டை எதிர்காலத்தில் காணலாம். தரநிலைகள் மற்றும் அளவுகோல்களை உள்ளடக்கிய பாடசாலை கட்டமைப்பு முறைப்படி உருவாக்கப்படுமென்றும் இதனூடாக முறையான அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## கழிவு மண் ஏற்றி...

பெட்டிக்குள்ளிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக உடனடியாக மன்னார் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் பொலிஸார் இப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். மேலும் நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று விசேட அதிரடிப்படையின் தலைமையில் நிலக் கண்ணிவெடியை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## ஜப்பான் 5.5 மில்.டொலர்... (03 ஆம் பக்கத் தொடர்)

நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை பரிசோதிப்பதற்கும் சிகிச்சை வழங்குவதற்கும் இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட வுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிடி ஸ்கேனர் இயந்திரம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வெளி நோயாளர் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் தினமும் வெளி நோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள வருகை தரும் 1,500 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## தாய் இறந்த சோகத்தில்...

பகுதியை சேர்ந்த சீனித்தம்பி சுதர்சன் (வயது 32) என்பவரே நேற்று முன்தினம் (27) உயிர் மாய்த்துள்ளார்.

இவர் மன்னார் மாவட்ட அரச திணைக்களம் ஒன்றின் அலுவலகர் ஆவார். தாயார் உயிரிழந்த நிலையில், தாயாரின் பிரிவால் அடிக்கடி மனவேதனையில் இருந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது. தாயின் இழப்பினை தாங்க முடியாது விரக்தியுடன் காணப்பட்ட இவர் கடிதம் ஒன்றினை எழுதி வைத்து விட்டு உயிர் மாய்த்துள்ளார்.

## GCE (O/L) பரீட்சை முடிவுகள்...

அவர் நேற்று தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஐந்து இலட்சத்து 17 ஆயிரத்து 486 பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

3,844 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெற்ற இந்த பரீட்சையில் நான்கு இலட்சத்து 7129 பரீட்சாத்திகள் பாடசாலை மட்ட பரீட்சாத்திகளாவர் . விசேட தேவையுடைய 590 மாணவர்களும் அந்த பரீட்சைக்குத் தோற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நடத்துனர் இன்றி இயங்கும்..

கொழும்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், Gaman by Trace கையடக்கத் தொலைபேசி செயலி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்த பொதுப் போக்குவரத்துச் சேவை பற்றிய அறிமுகம் செய்யப்பட்டது.

கொழும்பு கோட்டை, கொம்பனி தெரு, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை, நகர மண்டபம் உட்பட கொழும்பு நகரின் பெரும்பாலான பிரதான நிலையங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

இங்குள்ள சிறப்பு என்னவெனில் எவ்வளவு தூரம் பேருந்தில் பயணித்தாலும் 200 ரூபா மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணமாக அறவிடப்படும். மொபைல் அப்ளிகேஷன் மூலம் கட்டணம் செலுத்தப்படும். எனவே, இந்த பஸ்களில் நடத்துனர் இல்லை என்பது மற்றொரு சிறப்பு.

## விமான நிலையத்தில் திருப்பி...

மூலம் வெளிநாடு செல்வற்காக அவர் நேற்று பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு சென்றிருந்தார். எனினும், நீதிமன்றத்திலுள்ள வழக்குகளில், அவர் வெளிநாடு செல்வதற்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், நாட்டைவிட்டு அவர் வெளியேறுவதற்கு குடிவரவு – குடியகல்வு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இந்தியாவில் யோஹானிக்கு ...

சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றார்.

கடந்த 'தீபாவளி' அன்று 'கபில் சர்மா' நிகழ்ச்சிக்காக பல பிரபலமான பாடும் நட்சத்திரங்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

அந்த நிகழ்ச்சியில் சிறப்பு அதிதியாக யோஹானி கலந்துக்கொண்டமை தனக்கு மிகுந்த மகிழச்சி என தனது முகநூலில் அவர் குறிப்பிட்டுள்ளார்

சோனி டிவியில் ஒளிபரப்பாகும் இந்தியாவின் நம்பர் ஒன் நிகழ்ச்சிகளில் ருவனரி மனாஹரி சுகுமாலியும் ஒன்றாகும், மேலும் இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பம் குறித்து யோஹானி தனது முகநூலில் ஒரு குறிப்பைச் சேர்த்திருந்தார்.

## தேசிய பூங்காக்களுக்குள்...

சரணாலயத்திற்குள் பிரவேசித்து விலங்குகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சட்டவிரோதமாக செயற்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த தரப்பினர் அதிவேக நெடுஞ்சாலை சட்டத்தை மீறி பயணித்ததாக வெளியாகும் காணொளியை மையப்படுத்தி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கமைய, அதிவேக நெடுஞ்சாலையின் சீ.சீ.ரி.வி காணொளிகளை பரிசீலிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யால சரணாலயத்தில், விலங்குகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஜீப் ரக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட 9 பேர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதேநேரம், சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு நேற்று யால சரணாலயத்திற்கு பிரவேசித்து விசாரணைகளை முன்னெடுத்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்கள் மற்றும் வாகனங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## IMFக்கும் கடன் வழங்குனர்களுக்குமான...

இதன்போது தனது பதவிக்காலம் முடிந்து வெளியேறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி Tubagus Feridhanusetyawan மற்றும் புதிதாக நியமனம் பெற்றுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திருமதி. Sarwat Jahan ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் கடன் வழங்குனர்களின் மாநாடு என்பன தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டுவரப்படுவதுடன் இது தொடர்பில் அவரது கருத்துக்களை சர்வதேச நாணய நிதியத்துக்கு தெரியப்படுத்துவதாகவும் சாகல ரத்நாயக்க இந்தக் குழுவிடம் உறுதியளித்தார்.

பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ் சமரதுங்கவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

## தமிழ் தரப்புகளை ஒன்றுபட...

முடியுமெனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோர் அனைத்து தரப்புக்களையும் ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கான ஆர்வத்தை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த அரசியல் சூழலை தமிழ் தரப்புக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குறுகிய நலன்களையும், தேர்தல் அரசியல் பற்றிய சிந்தனைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அனைத்து தமிழ் தரப்புக்களினதும் முயற்சிகள் மற்றும் தியாகங்களின் பலனாக கிடைத்த மாகாண சபைகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஒன்றிணைந்து செயற்பட அனைவரும் முன்வரவேண்டும்.

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை செயற்படுத்துவதன் மூலம் அதனைப் பாதுகாத்துக் கொண்டு, ஒவ்வொரு தரப்பினரும் தாங்கள் எதிர்பார்க்கின்ற அபிலாசைகளை வென்றெடுப்பது பற்றி சிந்திப்பதே ஆரோக்கியமான அணுகுமுறையாக இருக்கும்.

கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டதைப் போன்று, தற்போதைய அரசியல் சூழலையும் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ள அனைவரும் முன்வரவேண்டும்" எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## எனக்கு எந்தவிதமான...

முன்தினம் இரவு தாம் தடுத்து நிறுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டிய ரஞ்சன் ராமநாயக்க நேற்று அமெரிக்கா செல்வதற்கான அனுமதியைப் பெற்றதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்காது குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் திருப்பி அனுப்பியதாக திணைக்கள பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் குறித்து நேற்று ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு எந்த பயணத் தடையும் விதிக்கப்படவில்லை என்று தனது வழக்கறிஞர்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்தே தான் அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமான பயணத்தைத் திட்டமிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் குடியகல்வு திணைக்களத்தின் கணினி வலையமைப்பு புதுப்பிக்கப்படவில்லை என்பதே பிரச்சினையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## "வெல்னஸ் விலேஜ்" ... (03 ஆம் பக்கத் தொடர்)

நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலக்காக கொண்டு சர்வதேச தரத்திலான சகல வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இந்த கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

வைத்தியசாலையின் திட்டங்கள் குறித்து ஆராய்ந்த ருவன் விஜேவர்தன, காணி சுவீகரிப்புப் பணிகளை துரிதப்படுத்தி வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். இந்தக் கூட்டத்தில், பியகம பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் பிரசன்ன சம்பத், ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஒருங்கிணைப்பு செயலாளர் கே.பி.தயாரத்ன, ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பு செயலாளர் ராஜித அபேகுணசேக்கர, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சந்திரரத்ன பல்லேகம, பியகம பிரதேச செயலாளர் சந்திமா சூரியாரச்சி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நெற் செய்கைக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

வங்கியிடமிருந்து இந்த கடன் கிடைத்துள்ளது.

இலங்கையில் பெரும்போக நெற்செய்கைக்கு சுமார் 1,50,000 டொன் யூரியா உரம் தேவைப்படுகிறது. அதனை முழுமையாக விநியோகிக்க முடியுமென விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹன புஷ்பகுமார மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சுரேன் படகொட ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

விவசாய சேவை மையங்கள் மூலம் இந்த உரங்கள் வயல் உரிமையாளர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படுகிறது. நெல் உரிமையாளர்களுக்கு குறைந்த பட்சம் 02 ஹெக்டெயார் வரையான உரங்கள் வழங்கப்படுகிறன. அதனடிப்படையில் விவசாயி தான் பயிர்ச் செய்யும் நிலப்பரப்புக்கு ஏற்ப உர மூடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கமத்தொழில் திணைக்களத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், வேளாண்மை செய்யப்படும் வலயத்தைப் பொறுத்தே விவசாயி ஒருவரால் கொள்வனவு செய்யப்படும் அதிகபட்ச உரத்தின் அளவு தீர்மானிக்கப்படும்.

மேலும், சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு 60,000 ஹெக்டெயார்களுக்கு அவசியமான 12,000 மெற்றிக் தொன் யூரியா வழங்கப்படவுள்ளதுடன் இதற்காக வழங்கப்படும் 50 கிலோ யூரியாவின் விலை 15,000 ரூபாவாகும்.

உக்ரைனில் இடம்பெற்று வரும் போர் மற்றும் பூகோள அரசியல் நிலைமைகள் காரணமாக உரங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக மிகவும் சவாலானதொரு சந்தை நிலைமை ஏற்பட்டுள்ளது.

சந்தை விலை உயர்வுக்கு மத்தியிலும் விவசாய அமைச்சு, 12,500 மெற்றிக் தொன் 50,000 மெற்றிக் தொன் மற்றும் 45,000 மெற்றிக் தொன் யூரியாவை மூன்று கட்டங்களாக விநியோகிப்பதற்காக மூன்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

இதேவேளை மேலும் 25,000 மெற்றிக் தொன் யூரியா கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தமொன்றும் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

அத்துடன் சலுகைக் கடன் அடிப்படையில் இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 21,000 மெற்றிக் தொன் யூரியா பெரும் போகத்தில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் கமத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் ஆதரவுடன், துறைமுகங்களிலிருந்து விவசாய சேவை மையங்களுக்கும், விவசாய சேவை மையங்களில் இருந்து விவசாயிகளுக்கும் உரங்கள் விநியோகம் செய்யப்படுவதை கண்காணிக்க விசேட கட்டமைப்பொன்றும் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்தக் கட்டமைப்பு சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு மேலாண்மை, குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் பாதிப்புகளை கண்காணிப்பதற்காக பயன்படுகின்றமை குறிப்பிடதக்கது.

## பெற்றோலிய திருத்த சட்டம்...

தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 26 ஆம் திகதி முதல் இந்த சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மதிப்பீட்டைத் தொடர்ந்து, பெற்றோலியப் பொருட்களை விற்பனை செய்வதற்கான புதிய சில்லறை விற்பனையாளர்களுக்கு இந்தாண்டு இறுதிக்குள் உள்நாட்டு சந்தைக்குள் நுழைய அனுமதி வழங்கப்படும் என அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார்.

## சாரதி அனுமதிப்பத்திரங்கள்...

இதுவரை தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள 06 இலட்சம் பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட உள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். தற்போது வெளிநாடு செல்வோருக்கு மாத்திரமே சாரதி அனுமதிப்பத்திரங்கள் அட்டைகளில் அச்சிடப்பட்டு வழங்கப்படுவதாகவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## அரசிடம் நிவாரணம்...

சமூர்த்தி உதவிகளை பெறுகின்றனர். 4 இலட்சத்து 16 ஆயிரத்திற்கும் அதிக குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் முதியோர் கொடுப்பனவை பெறுகின்றனர்.இதுதவிர, விசேட தேவையுடையோர் மற்றும் ஏனைய நிவாரணங்களையும் பலர் பெறுகின்றனர்.இதற்கு மேலதிகமாக புதிதாகவும் உள்வாங்கப்படவுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில், வரி அறவிடுவதன் மூலமே அந்த கொடுப்பனவுகளை செலுத்த முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

## விண்ணப்பங்களை ஏற்கும்...

கிடைத்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

நலன்புரி உதவிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்களென அடையாளம் காணப்பட்டுள்ள 70 சதவீதமானவர்களின் தரவுகள் தற்போது தரவுக் கட்டமைப்பில் பதிவேற்றப்பட்டுள்ளன.

ஏனைய 30 சதவீதமானோரின் தரவுகள் பிரதேச செயலகங்களிலுள்ள தரவுக் கட்டமைப்பில் பதிவேற்றப்படுகின்றன. மேலும் 1.5 மில்லியன் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, விண்ணப்பதாரரின் வீடுகளுக்குச் சென்று தரவுகள் உறுதிப்படுத்தப்படவுள்ளன. இந்தப் பணிகளை நவம்பர் மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

## சிறுவர், பெண்கள் மீதான...

போது பாரிய அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி வரை, ஒப்புதல் மற்றும் ஒப்புதல் அற்ற பலாத்கார நிலையில் இந்த பாலியல் வன்புணர்வுகள் இடம்பெற்றுள்ளன. இதில் 273 வன்புணர்வுகள் இளம் வயதினருடன் தொடர்புடையவையாகும். எனினும் கடந்த வருடத்தில் 1382 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகின. இதில்,சிறுவர்கள் தொடர்புடைய முறைப்பாடுகள் 250 ஆகும் .

இதேவேளை ஒப்புதலுடன் இடம்பெற்ற பாலியல் செயற்பாடுகள் பெரும்பாலானவை காதல் விவகாரங்களுடன் தொடர்புடையவை.

எனினும் பாதிக்கப்பட்ட பெண்கள் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பதால் இது பாலியல் வன்புணர்வுகளாகவே கருதப்படுகின்றன.

இலங்கையின் தண்டனைச் சட்டத்தின் 363வது பிரிவின்படி, 16 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணுடன் (அவளுடைய ஒப்புதலுடன் அல்லது இல்லாமல்) உடலுறவு கொள்வது சட்டப்பூர்வ பாலியல் வன்புணர்வுக்கு சமமாகும் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## இனப்படுகொலை ஒன்று...

கண்மூடித்தனமானது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வன்னேரிக்குளம் ஐயனார் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னேரிக்குளம் வட்டாரக்கிளைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் "அறவழிப் போராட்டம் ஒன்றின் எல்லா நியாயங்களையும் அடியோடு ஒதுக்கிவிட்டு, இந்த நாட்டின் சுதேசிய இனமொன்றின் மீது சிங்கள பேரினவாதம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் நேரடியாக முகம்கொடுத்து, கொடிய போரொன்றின் முழுமையான தாக்கங்களை எதிர்கொண்ட எங்கள் மக்களுக்குத்தான் அந்தப் போரின் வலியும், அது தந்த இழப்புக்களின் வலியும் தெரியும்.

இறுதிப்போரின்போது எவரும் காணாமற்போகவில்லை என்று சொல்லியிருக்கும் ஓ.எம்.பியின் தலைவர், தங்கள் கைகளால் இராணுவத்திடம் ஒப்படைத்த பிள்ளைகளை மீட்டுத்தரக் கூறி இன்றைக்கு இரண்டாயிரம் நாட்களைக் கடந்தும், தெருத்தெருவாக நின்று போராடும் தாய்மாருக்கும், அவர்களின் கண்ணீருக்கும் என்ன பதில் சொல்லப்போகிறார் என்றும், தனது அரசதரப்பு விசுவாசத்தைக் காட்டுவதற்காக, ஒடுக்கப்பட்ட இனமொன்றின் உணர்வுகளோடு விளையாடுவதை மகேஷ் கட்டுண்டல போன்ற இனவாதிகள் நிறுத்த வேண்டும் என்றும் இதே பொய்யைத் தான் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் சொல்லியிருந்தன என்பதை இனியாவது சர்வதேச சமூகம் உணரத் தலைப்பட வேண்டும்" தெரிவித்துள்ளார்.

## பஸ் கட்டணங்கள்...

சட்டத்தை நீக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து வினவியபோது பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, போக்குவரத்து அமைச்சு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர், பஸ் கட்டணங்கள் 10 வீதத்தால் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் டீசல் லீற்றரின் விலை, 15 ரூபாவினால் குறைக்கப்பட்டது.

இதன்போது, கருத்து வெளியிட்டிருந்த போக்குவரத்து அமைச்சர், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய, பயணிகளை ஏற்றிச் செல்லும் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர், கட்டணத்தைக் குறைப்பதாக தெரிவித்திருந்தார்.

இதற்கமைய, குறித்த சட்டத்தை நீக்குமாறு, நான்கு சந்தர்ப்பங்களில் போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சிற்கு எழுத்துமூலம் அறியப்படுத்தி இருந்தது. இதுதொடர்பில் நடவடிக்கை எடுத்தால், 12 வீதத்தால் பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியும் என போக்குவரத்து அமைச்சு சுட்டிக்காட்டியது.

இதற்கமைவான தீர்மானத்தை விரைவாக எடுப்பதாக சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டால், 34 ரூபாகவுள்ள குறைந்தபட்ச பேருந்து கட்டணம், 29 ரூபாவாக குறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# கட்டட நிர்மாணங்கள், பாதை அபிவிருத்திகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தம்

## கிழக்கு ஆளுனர் அதிரடி உத்தரவு





**தம்பலகாமம் குறூப் நிருபர்**

வெளிநாட்டு உதவியின் கீழ் பெறப்படும் பணத்தில் கட்டடங்கள் மற்றும் வீதி நிர்மாணப் பணிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மாகாண அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

அந்த பணத்தின் மூலம் நாட்டில் பல தேவையற்ற கட்டடங்கள் கட்டப்பட்டு அவை உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நடந்துள்ள ஒரே பலன் கட்டுமான ஒப்பந்தகாரர்களை வளப்படுத்துவது மட்டுமே எனவும் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (27) மாலை உலக வங்கியின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் உலக வங்கி பிரதிநிதிகளுடனான விசேட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ஆளுநர்,

உலக வங்கி உதவியின் கீழ் பெறப்பட்ட நிதியில் மிகவும் வசதியான திட்டங்களை முன்கொண்டு செல்லவும். கட்டுமானத்திற்கு பின் செல்ல வேண்டாம். எங்கிருந்தோ பணம் வரும்போது கட்டடம் கட்டவோ, பாதை அமைக்கவோ, கொங்ரீட் பாதை, காபட் பாதை அமைக்கவே பழகிவிட்டோம். இதுவரை அப்படித்தான் செய்து வந்தோம். இவற்றின் விளைவுகளை நாம் இப்போது பெற்றுள்ளோம். எனவே இனிமேல் அதை செய்யாதீர்கள். மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் பல உள்ளன. இது போன்ற திட்டங்களுக்கு விரைவில் செல்லுங்கள் என, அங்கிருந்த உள்ளூராட்சி அமைப்புகளின் தவிசாளர்களிடம் கூறினார்.

# அம்பாறையில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை மீள வழங்க நடவடிக்கை

**முஷாரப் எம்.பி**



**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நெற்செய்கை காணிகளை உரிமையாளர்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

குவைட் அல்நஜாத் மனிதாபிமான அமைப்பின் சுமார் ஒரு கோடி ரூபாய் நிதியில் அந்நூர் மனிதாபிமான அமைப்பினால் பொத்துவில் செங்காமம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய குடிநீர் திட்டத்தினை அங்குராப்பணம் செய்து வைக்கும் வைபவம் திங்கட்கிழமை (24) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பாரிய அபிவிருத்தி திட்டங்களை முன்கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை இனங்கண்டு இவ்வாறான சமூக சேவை நிறுவனங்கள் ஊடாக அபிவிருத்தி திட்டங்களை முன்கொண்டு செல்வது காலத்தின் கட்டாயமாகும். அந்த வகையில் குவைட் அல்நஜாத் மனிதாபிமான அமைப்பு நீண்ட காலமாக இப் பிரதேசத்தில் தேவையாக இருந்த குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு முன்வந்ததையிட்டு பாராட்டுகின்றேன். இன நல்லிணக்கத்திற்கு நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினால் தான் இன நல்லிணக்கத்துடன் அபிவிருத்திகளையும் கொண்டு செல்ல முடியும்.

மக்களின் வாழ்வியல் மேம்பாடு என்பது வெறுமனே பௌதீக அபிவிருத்தி சார்ந்ததல்ல மாறாக அது சமூக நல்லிணக்கம், புரிந்துணர்வு, நம்பிக்கையை கட்டியெழுப்புதல், மனப்பாங்கு விருத்தி, தரமான கல்வி போன்றவை அமையப் பெறுதல் முக்கியமானதாகும். நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் வரை என்னாலான அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு செல்வேன் என்றார்.

இந் நிகழ்வில் குவைட் அல்நஜாத் மனிதாபிமான அமைப்பின் இலத்திரனியல் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் சமத் சகீர் அப்துல் அஸீஸ் பொத்துவில் பிரதேச செயலாளர் ஐ. பிர்னாஸ், தவிசாளர் எம்.எச்.ஏ. றஹீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மூதூர் தனியார் கல்வி நிறுவனங்களின் வகுப்பு ஒழுங்கு பற்றி அறிவித்தல்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் நலன் கருதி புதிய கால நடைமுறையினை பின்பற்றுவதற்கான கால அட்டவணையை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கி உள்ளதாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் தெரிவித்தார்.

மேலும் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் எதிர்நோக்கும் பல அசௌகரியங்களை கவனத்திற்கொண்டு இந்நடைமுறையை பின்பற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச சபை, பிரதேச செயலகம், வலயக்கல்வி அலுவலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பொலிஸார் மற்றும் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் ஊடாக இது தொடர்பாக நடாத்திய கலந்துரையாடலின் மூலம் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நடைமுறை பற்றிய கால அட்டவணையும் வழங்கப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள்




**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் வந்துலசேன தலைமையில் இடம்பெற்ற இவ்விழா, கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி நிலைய கூட்ட மண்டபத்தில் (27) இடம்பெற்றது. இதில் வட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அரச நிறுவனங்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டன.

கடந்த 2020 ஆம் ஆண்டு வட கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச நிறுவனங்களில் நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறனில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கான விருதுகள் கொரோனா தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டு நேற்றைய தினம் இடம்பெற்றது. இதன்போது, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள் கிடைக்கப்பெற்றது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத சித்த வைத்தியசாலைக்கு விசேட திறமைச் சான்றிதழுடன் விருதும், மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு திறமைச் சான்றிதழும் கிடைக்கப்பெற்றன. இவ்விருதுகளை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் மற்றும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத சித்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் (திருமதி) ஜே.பாஸ்க்கரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.



கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் சிறுவர் மாதிரி தொழிற்சந்தை அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்ற போது,... படம் பாண்டிருப்பு தினகரன் நிருபர்

# அம்பாறை மாவட்டத்தில் குவாசி நீதிவான் (காதி) பதவி வெற்றிடங்களுக்கு

## விண்ணப்பம் கோரல்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேசங்களில் நிலவும் குவாசி நீதவான் (காதி) பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஆனந்தி கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகள், கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரைவாகுப்பற்று வடக்கு, இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வர்ப்பத்தான்சேனை, அமீரலிபுரம், நல்லதண்ணி மலை, இறக்காமம் கிராம அலுவலகர் பிரிவு 01 முதல் 09 வரை, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரைவாகுப்பற்று தெற்கு, சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மல்கம்பிட்டி, நெய்னாகாடு, நாவிதன் வெளி ஆகிய பிரதேசங்களுக்கு குவாசி நீதவான் (காதி) பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி அல்லது அல் ஆலிம் பரீட்சையில் சித்தியடைந்தவராயிருத்தல், அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பெற்ற மௌலவி அல்லது சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும், நல்லொழுக்கமும் முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், இருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 04ம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிச் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், த.பெ.இல 573, கொழும்பு12 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஆயித்தியமலையில் பெரும் போக உர விநியோகம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



2022/2023 பெரும்போகத்திற்கான இரசாயன உர விநியோகமானது மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள ஆயித்தியமலை கமநல சேவைகள் நிலையத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ. ரஷீட் தலைமையில் (27) ஆரம்பிக்கப்பட்டது .

இந் நிகழ்வில் கமநல அபிவிருத்திக் குழுத் தலைவர், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இவ் நிகழ்வின் போது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் உர விநியோகம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் விவசாயிகளுக்கு எந்த அடிப்படையில் எந்த அளவில் விநியோகிப்பது தொடர்பாகவும் தெளிவூட்டப்பட்டது.







## மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு மேட்டு நில பயிர்ச் செய்கைக்கான தானியங்கள் வழங்கி வைப்பு



(மன்னார் குறூப் நிருபர்)

கிராமிய பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேட்டுநில பயிர்ச் செய்கைக்கான தானியங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (28) காலை 10 மணியளவில் நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நானாட்டான் பிரதேச செயலகத்தில் எஸ்.கிறிஸ்கந்த குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான உளுந்து, பயறு போன்ற தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 860 விவசாயிகளுக்கு உளுந்து, பயறு உள்ளிட்ட மேட்டு நில பயிர்ச் செய்கைக்கான தானியங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதன் முதற்கட்டமாக நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 40 விவசாயிகளுக்கு மேட்டு நில பயிர் செய்கைக்கான உளுந்து, பயறு தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் ஐயாத்துறை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளது. அத்தோடு பழைய மாணவர் சங்கத்தின் புதிய யாப்பு வரைபும் சபையில் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு சங்க நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# யாழ்.பல்கலையின் சர்வதேச ஆய்வு மாநாடு முதல் பெண்மணி மைத்திரீ முதன்மை உரை




யாழ்.விசேட நிருபர்

நாட்டின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரீ விக்கிரமசிங்க நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். யாழ்.பல்கலைக்கழகத்தில் "பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்" என்ற தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் சென்றிருந்தார்.

புதிய இயல்பு நிலையில் எதிர் காலத்தைச் செழுமைப்படுத்தல் (Shaping the Future in the New Normal) என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் யாழ்.பல்கலைக் கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் (JUICE 2022) தொடரில், பல்கலைக் கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தினால் நடத்தப்படும் ஆய்வு மாநாடு கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வு மாநாட்டின் முதன்மை உரையை இலங்கையின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரீ விக்கிரமசிங்க நிகழ்த்தினார்.

# மன்னாரில் கடல் வளத்தை நம்பி வாழ்வோர் அதிகம்; கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தவும்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல்

மன்னார் மாவட்டத்தில் சுமார் 11ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் கடலை நம்பியே தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றன. ஆகவே கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் எமக்குள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினால் எண்ணெய் கசிவு முன்ஆயத்தம் தொடர்பான பயிற்சி பட்டறை மன்னார் ஆஹாஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடல் சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுக்கும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் இதற்கான திட்டத்தை மேம்படுத்தும் முகமாக உதவிக் கரம் நீட்டியுள்ள உலக உணவுத் திட்ட அமைப்புக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

எமது மன்னார் மாவட்டத்தில் சுமார் 11 ஆயிரம் மீனவ குடும்பங்கள் மீன்பிடித்தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன் மாவட்டத்தில் அதிகமான குடும்பங்கள் நேரடியாக மீன்பிடியில் ஈடுபடாத போதும் இத்தொழிலை நம்பியே வாழ்ந்துவருகின்றனர்.

ஆகவே இப்பகுதியில் கடல் சுற்றாடல் பாதுகாப்பை மிக அவசியமாக கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் உண்டு. அண்மையில் நீர்கொழும்பு கடலில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக எங்கள் மாவட்ட மீனவர்களும் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகியிருந்தனர் என அவர் தெரிவித்தார்.



கல்வியமைச்சினால் நடாத்தப்பட்ட குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற இரு மாணவிகளுக்கு தமிழ் விருட்சம் அமைப்பினூடாக நேற்றையதினம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம் ஓமந்தை விஷேட நிருபர்)

## கோண்டாவிலில் கசிப்பு குகை முற்றுகை



யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் கசிப்பு குகையொன்றினை பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்றுகையிட்ட போது அங்கிருந்தவர்கள் தப்பியோடியுள்ளனர்.

அவ்விடத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 60 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவற்றை மீட்டுள்ளனர்.

இதுகுறித்து மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஒன்றரை வருடங்களாக தலைமறைவாக இருந்த வாள் வெட்டு சந்தேக நபர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ். உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபரொருவர் 16 மாதங்களின் பின்னர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 26 வயதுடையவர் என தெரியவருகின்றது.

கோண்டாவில் செல்வபுரம் பகுதியிலிருந்த கலையகமொன்றினுள் கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பலொன்று , அங்கிருந்த 06 பேர் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்டு, அங்கிருந்த வாகனம் மற்றும் கலையகத்திற்கும் தீ வைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். எனினும் பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்ட நபர் கடந்த ஒன்றரை வருடங்களாக தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் இணுவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## யானைகள் அட்டகாசம்; பயன்தரும் மரங்கள் அழிப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காட்டு யானைகளால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கிராமங்களுக்குள் புகும் யானைகள் மக்களின் வாழ்வாதார பயிர்களை அழித்துவருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மல்லிகை தீவு, தேவிபுரம், கைவேலி போன்ற கிராமங்களுக்குள் இரவு நேரங்களில் புகும் யானைகள் தென்னை,வாழை,பலாமரங்கள் என பயன்தரு மரங்களை அழித்து வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது காலப்போக நெற்பயிர்செய்கை ஆரம்பித்துள்ளமையால் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் படையெடுக்கின்றன. நீண்டகாலமாக யானைவேலி அமைத்துத் தருவதாக பலர் வாக்குறுதிகள் கொடுத்தும் இதுவரை யானை வேலி அமைத்துக்கொடுக்கப்படவில்லையென தெரிவிக்கின்றனர்.

கல்மடு தொடக்கம் இடைக்கட்டு வரையிலான 30 கிலோமீற்றருக்கான யானை வேலி அமைக்கும் திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளபோதும் அது கைவிடப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன.


கிராமங்களுக்கான யானைவேலி இல்லாமையால் காட்டு யானையினால் ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கான வாழ்வாதார பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

## போதைப் பொருள் வியாபாரி கைது

யாழ். விசேட நிருபர்

தெல்லிப்பழை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபரொருவர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மல்லாகம் கோணப்புலம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மலைச்சாரல்









கண்டி மோபிறே மகளிர் கல்லூரியின் 'செந்தமிழ் நாதம்' 2022 கலை விழா அண்மையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக ஹற்றன் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஏ.ஆர். சத்தியேந்திரா கலந்து கொண்டார். (படம் அக்குறணை குறூப் நிருபர்)

## ஹற்றன் பகுதிகளில் மருந்து தட்டுப்பாடு

ஹற்றன் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களிலுள்ள தனியார் மருந்தகங்களில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.



டிக்கோயா, கொட்டகலை, மஸ்கெலியா, பொகவந்தலாவை ஆகிய வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளர்களுக்கு, அங்கு தேவையான மருந்துகள் இன்மையால் வைத்தியர்கள் வெளிமருந்தகங்களில் வாங்குமாறு பற்றுச்சீட்டு எழுதிகொடுக்கின்றனர். எனினும் தற்போது தனியார் மருந்தகங்களிலும் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இன்னும் சில மருந்தகங்களில் அதிக விலைக்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக நோயாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே மருந்துகள் பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக, தாங்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## குண்டும் குழியுமாக காணப்படும் ஹற்றன் பஸ் தரிப்பிடம்



ஹற்றன் நகரிலுள்ள பிரதான பஸ் நிலையம் குண்டும் குழியுமாக காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இதனால் பஸ்கள் தள்ளாடி, தட்டுத்தடுமாறி, பஸ் நிலையங்களுக்கு சென்று, திரும்புகின்றன. அதுமட்டுமின்றி பயணிகளும் பெரும் அவதிப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

மழைக்காலங்களில் குழிகளில் நீர் நிரம்பி நிற்கும். பஸ்கள் பயணிக்கும் போது நடந்து செல்லும் பயணிகளால் ஒதுங்கி செல்ல முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு ஒதுங்கி சென்றாலும் வேகமாக செல்லும் பஸ்களால் சேற்று நீர் உடைகளில் படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

சேற்றுக்குழிக்குள் பஸ்கள் விழுந்து விடாத வகையில் வாகனத்தை செலுத்திச் செல்வது என்பது கடினமான காரியமாகுமெனவும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக இந்த தரிப்பிடத்துக்குச் செல்லும் வீதிகள் குண்டும் குழியுமாகவே காணப்படுகின்றன. இதுதொடர்பில் பலரின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும், நிலைமையை எவரும் கவனத்தில் எடுப்பதாய் இல்லை.

மழைக்காலங்கள் என்றால் பயணிகளால் நடந்து செல்லமுடியாது. பஸ்களைக் கண்டு ஒதுங்குவதற்குக் கூட பாதுகாப்பான இடமில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பயணிகள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும், வெளிப்பிரதேசங்களிலிருந்து வந்துசெல்வோரும் கடுமையான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

ஆகையால் மழைக்காலம் ஓய்ந்ததும், வீதிகளை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென உரிய தரப்பினரை பாதிக்கப்பட்ட மக்கள் வலியுறுத்துகின்றனர்.

## போதை மருந்துகளை தன்வசம் வைத்திருந்த இளைஞன் கைது

ஹெரோயின் மற்றும் போதை மருந்துகளை தன்வசம் வைத்திருந்த இளைஞனொருவரை அலதெனிய பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

21 வயதுடைய இளைஞனொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அலதெனிய நகரத்தில் அங்குமிங்கும் சுற்றித்திரிந்த வண்ணம் இருந்துள்ளார்.

இதனால் சந்தேகத்துக்கிடமான முறையில் சுற்றி திரிவதை அவதானித்த பொலிஸார், அவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது, உடலில் மறைத்து வைத்திருந்த 2,340 மில்லிகிராம் ஹெரோயின், கெபிக்கா என்றழைக்கப்படும் 346 போதை மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதையூட்டும் இந்த மருந்துகள் பாடசாலை மாணவர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக மறைத்துவைத்திருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில், ஹெரோயின் பெற்றுக்கொண்ட இடத்தை கண்டறிவதற்காக சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**மண்சரிவு அபாயமுள்ள**

## தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயம் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றம்

**440 இலட்சம் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம்**

காவத்தை தினகரன் விசேட நிருபர்

மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ள தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயம் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ள தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தை தேவாலகந்த பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாற்று இடத்திற்கு கொண்டு செல்வது குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் சப்ரகமுவ மாகாண சபை கட்டடத் தொகுதியில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ள தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தை தேவாலேகந்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

1999 ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் மேற்படி தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதி மண்சரிவில் பாதிக்கப்பட்டது. இதனையடுத்து தெஹியோவிட்ட களனிவெளி தோட்ட கம்பனிக்கு சொந்தமான தேவாலகந்த பிரதேசத்தில் இப்பாடசாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.



அதற்கமைய 02 ஏக்கர் காணி வழங்கப்பட்டதுடன் அதில் 440 இலட்சம் ரூபா செலவில் புதிதாக மூன்று மாடி கட்டடம் அமைக்கப்பட்டது. 11 வகுப்பறைகளை கொண்டுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக அலுவலகம் மற்றும் ஆய்வுக்கூடம், மலசலகூடம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி தேவாலகந்த பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாடசாலை கட்டடத் தொகுதியில் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகளை விரைவில் அங்கு கொண்டு செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வகுப்புகளை பாதுகாப்பான இடத்தில் நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மேற்படி பாடசாலையிலுள்ள அனைத்து வகுப்பறைகளையும் தேவாலகந்த புதிய கட்டடத்தொகுதிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்தில் 6 தொடக்கம் 13 வரை வகுப்புகள் உள்ளதுடன் 420 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையில் 36 ஆசிரியர்கள் சேவையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி கலந்துரையாடலில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, தெஹியோவிட்ட பிரதேச சபை தலைவர் துமிந்து ஷாமிந்த, சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தின் செயலார் எச்.டி.சிசிர, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுஜானி விஜேதுங்க, மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பிரிவு பணிப்பாளர் நெவில் குமாரகே,மாகாண கல்வி பணிப்பாளர் சேபால குருப்பு ஆராச்சி மற்றும் பாடசாலை அதிபர் உட்பட பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## எழுத்தாளர் இரா.நித்தியானந்தனின் இரு நூல்கள் வெளியீடு

(அக்குறணை குறூப் நிருபர்)

இரா. நித்தியானந்தன் எழுதிய இரண்டு நூல்கள் நாளை 30ஆம் திகதி யட்டிநுவர விவேகானந்தா தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்து கொள்வார்.

எழுத்தாளரும் நூல் விமர்சகருமான இரா. நித்தியானந்தன் எழுதிய ஆய்வு நூல் ஒன்றும் கவிதைத் தொகுதி ஒன்றும் நாளைய தினம் வெளியிடப்படவுள்ளன.

'இரவைத் தேடும் நிழல்' என்ற கவிதைத் தொகுதியும், '19ஆம் நூற்றாண்டின் இந்திய வம்சாவளித் தமிழர்களின் இலங்கை நோக்கிய வருகையில் உந்தல் இழுவை காரணிகளின் செயற்பாடுகள்' என்ற ஆய்வு நூலும் வெளியிடப்படவுள்ளன.

அதேநேரம், பேராதனைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் இரா. மகேஷ்வரன் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் சேவா ஜோதி எஸ் முத்தையா சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்வார். சமூக சேவையாளர்களான பழனியப்பன், பெ. செல்லையா, வே. சிதம்பரநாதன் உட்பட பலர் விசேட பிரதிகளைப் பெற்றுக் கொள்வர். கண்டியில் பிரபல நூல் வெளியீட்டாளரான கண்டி இரா.அ. இராமன் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## மலையக விவசாயிகளுக்கும் சலுகைகள் வழங்கப்படவேண்டும்

**முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர். இராஜாராம் கோரிக்கை**

தலவாக்கலை குறூப் நிருபர்



அரசாங்கம் நெல் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் மற்றும் நிவாரணங்கள் மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் வழங்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு மூட்டை யூரியா 10 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் மலையகத்தில் மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு 29 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு மூட்டை யூரியா விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யூரியா வழங்குவதில் பாரபட்சம் காட்டாமல் மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு மூட்டை யூரியா வழங்க வேண்டும்.

மேலும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்படும் அதாவது மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் நெல் உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் மலையகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை.

இது ஒரு பாரபட்ச செயலாகும். நம் நாட்டு மக்கள் மூன்று வேளையும் சோறு மட்டும் உண்பதில்லை, சோற்றுடன் மரக்கறிகளையும் சேர்த்து உண்ணுகின்றனர் என்பதை நமது அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. மலையக மரக்கறிகளுக்கு பயன்படுத்தப்படும் உர வகைகள் மற்றும் மருந்து வகைகளும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

மலையகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் இலங்கை முழுவதும் கொண்டுசெல்லப்படுகின்றன. மரக்கறிகள் இறக்குமதி செய்வதில்லை. ஆனால் அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றன.

எனவே உள்ளூரில் உற்பத்தி செய்யும் மரக்கறி உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலையகத்தில் நுவரெலியா, கந்தப்பளை, நானுஓயா, இராகலை, பொரகஸ், வெலிமட, அக்கரப்பத்தனை உட்பட பல இடங்களில அரசாங்க தொழிலைவிட மரக்கறி உற்பத்தி தொழிலை பிரதான தொழிலாக செய்துவருகின்றனர்.

அதேபோல பெருந்தோட்ட தொழிலாளர்களும் பெருந்தோட்டங்களில் வழங்கும் ஊதியம் போதாமையால் மேலதிக வருமானத்துக்காக மரக்கறி உற்பத்தியை பிரதான தொழிலாக செய்துவருகின்றனர். எனவே மலையகத்தில் மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசாங்கம் சலுகைகளும் நிவாரணங்களும் வழங்கி பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.



ஆசிரியர் இடமாற்றக் கொள்கை மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலொன்று மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் மத்திய மாகாண கல்விப்பணிப்பாளர் அமரசிறி பியதாஸ, உதவி கல்வி செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டனர்.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதால் சுகாதார சீர்கேடுகள் உட்பட பல்வேறு இன்னல்களுக்கும் பொது மக்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை நகர் உட்பட புறநகர்ப்பகுதிகளுக்கு செல்லும் வீதிகள் கிராமப்பகுதிகளிலும் இந்நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப்பலரும் பரவலாக நாய்க்கடிகளுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர். பொது மக்களை பாதுகாக்க அரச சுகாதாரத்துறையினரால் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொளளப்படாமை குறித்து பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாலை நேரங்களில் இவற்றின் தொல்லைகள், அட்டகாசங்கள் அதிகரித்து காணப்படுவதாகவும் வீதி வழியாக இவை கூட்டாக வருவதனால் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் செல்ல அச்சமடைவதாகவும் பெ ற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

நாய்க்கடியினால் பெரும் எண்ணிக்கையானவர்கள் நீர்வெறுப்பு எனும் நோய்க்கு உட்பட்டுள்ளதாகவும் சுகாதார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரையிறுதி வாய்ப்புக்காக இலங்கை இன்று நியூசிலாந்துடன் பலப்பரீட்சை

டி20 உலகக் கிண்ணத்தில் அரையிறுதி வாய்ப்பை அதிகரிப்பதற்கான முக்கிய போட்டியில் இலங்கை அணி இன்று (29) நியூசிலாந்து அணியை சிட்னியில் எதிர்கொள்ளவுள்ளது.

இலங்கை அணி இதுவரை சுப்பர் 12 சுற்றில் ஒரு வெற்றி மற்றும் ஒரு தோல்வியுடன் 2 புள்ளிகளோடு குழு 1 இல் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் இலங்கைக்கு மேலும் மூன்று போட்டிகளே எஞ்சி இருக்கும் நிலையில் நியூசிலாந்துடனான போட்டி தீர்க்கமானதாக உள்ளது.

குழு ஒன்றில் தோல்வியுறாத அணியாக இருக்கும் நியூசிலாந்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பெற்ற உறுதியான வெற்றி அந்த அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (25) நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி தோல்வியை சந்தித்தது மாத்திரமன்றி வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோவையும் காயம் காரணமாக இழந்தது.

இந்நிலையில் இன்றைய போட்டிக்கு அவருக்கு பதில் பிரமோத் மதுஷான் அல்லது கசுன் ராஜித்த அழைக்கப்பட வாய்ப்பு உள்ளது. சிறு காயத்திற்கு உள்ளாகி இருந்த மதுஷான் அதில் இருந்து மீண்டிருக்கும் நிலையில் இன்றைய ஆட்டத்தில் களமிறங்க வாய்ப்பு உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இலங்கை வேகப்பந்து வரிசை அடுத்தடுத்து காயமடைந்து பலவீனமடைந்திருக்கும் சூழலில் சுழற்பந்து வீச்சாளர்களான மஹீஷ் தீக்ஷன மற்றும் வனிந்து ஹசரங்கவில் அதிகம் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வனிந்து ஹசரங்க அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்தார். உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஹசரங்கவை போட்டிக்கு முன்னரே ஆஸி. இலக்கு வைத்திருந்தது ஆட்டத்தின் போது நன்றாகத் தெரிந்தது.

அந்த நிலை நியூசிலாந்து போட்டியிலும் ஏற்படாமல் இருக்க அவர் பார்த்துக் கொள்ள வேண்டும். சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பாட்டாலேயே இலங்கை துடுப்பாட்ட வரிசை மீதான அழுத்தம் குறையும்.

எனினும் நியூசிலாந்து அணி எப்போதும் இல்லாத அளவுக்கு வலுவான அணியாக உள்ளது. ஆரம்ப வீரர்களான பின் அலன், விக்கெட்காப்பு, துடுப்பாட்ட வீரரான டெவோன் கொன்வேய், அணித்தலைவர் கேன் வில்லியம்ஸ், ஜேம் நீஷன் என்று நியூசிலாந்தின் துடுப்பாட்ட வரிசை உறுதியாக உள்ளது. அதனை ஆட்டங்காணச் செய்தாலேயே இலங்கைக்கு முன்னேற முடியும்.

சிட்னி ஆடுகளத்தில் தற்போது வெப்பநிலை 22 பாகை செல்சியஸ் அளவு போதுமான சூடாக இருப்பதாக கூறப்படுகிறது. இது இலங்கை அணிக்கு சாதகமானது என்பதோடு, இன்றைய போட்டிக்கு மழை குறுக்கிடும் வாய்ப்பும் குறைவு என்று கருதலாம்.

இன்று நடைபெறும் ஒரே ஒரு சுப்பர் 12 போட்டியாக பிற்பகல் 1.30க்கு இந்தப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.




## அரையிறுதிக்கான வாய்ப்பினை பயன்படுத்த நவீட் நவாஸ் உறுதி



நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் எம்முடைய பலத்துக்கு ஏற்ப போட்டியிடுவது மாத்திரமின்றி, அரையிறுதிக்கான வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் நவீட் நவாஸ் கூறியுள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிராக இன்று (29) நடைபெறவுள்ள சுப்பர் 12 சுற்றுக்கான போட்டி தொடர்பில் நவீட் நவாஸ் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டி தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், “உலகின் முன்னணி அணிகளில் ஒன்று நியூசிலாந்து. அவர்கள் உயர்ந்த தரத்துடனான அணி. உலகக் கிண்ணத்தை எடுத்துக்கொண்டால், எமது குழாத்தில் நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற அணிகள் இருக்கும்போது எந்த அணியையும் இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது.

எனவே அரையிறுதிக்குச் செல்ல வேண்டும் என்றால் எவ்வாறான தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாம் அறிவோம். அதனால் எமது பலத்துடன் விளையாடி அரையிறுதிக்கு தகுதிபெறும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்”

அதேநேரம் சிட்னி மைதானமானது இலங்கை அணிக்கு சாதகமான மைதானங்களில் ஒன்று என குறிப்பிட்டுள்ள அவர், இந்த போட்டியை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

“சிட்னி ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமானது. பந்துகள் வேகமாக பௌண்டரியை அடையக்கூடிய மைதானம். ஓட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, மாற்று திட்டங்களுடன் நாம் களமிறங்க எதிர்பார்க்கிறோம். கடந்த காலங்களை பார்க்கும் போது சிட்னி மைதானம் இலங்கைக்கு சாதகமாக இருந்துள்ளது. எனவே, இந்தப்போட்டிக்காக நாம் காத்திருக்கிறோம்” என அவர் மேலும் கூறினார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி இன்று சனிக்கிழமை (29) சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை நேரப்படி பி.ப. 01.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சரஸ்வதி மாணவர் இருவர் தேசிய மட்டத்திற்கு தெரிவு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



பதுளை வின்சன்ட் டயஸ் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஊவா மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

18 வயதுக்கு உட்பட்ட 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் ஜி. துலக்ஷாந்த் முதலிடத்தையும் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றதோடு 12 வயதுக்கு உட்பட்ட 50 மீற்றர் பிரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் கே. தருக்ஷன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

## துஷ்மன்த சமீரவுக்கு ஆஸியில் சத்திர சிகிச்சைக்கு நடவடிக்கை



டி20 உலகக் கிண்ணப் போட்டியின்போது காயத்திற்கு உள்ளாகி இலங்கைக் குழாத்தில் இருந்து விலகிய வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீரவுக்கு அவுஸ்திரேலியாவில் சத்திர சிகிச்சை இடம்பெறவிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமீர கணுக்கால் காயத்திற்காக மருந்து பெற்று வந்ததாகவும் அவ்வாறு ஆடிக்கொண்டிருந்த போதே அவருக்கு மீண்டும் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவரை அவுஸ்திரேலியாவிலேயே தங்க வைத்து சத்திர சிகிச்சைக்கான தேவைகளை பெற்றுக் கொடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண சதுரங்க போட்டி

**சவளக்கடை குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண சதுரங்க போட்டி புறோ நைட் செஸ் அகடமியின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஸாக்கிர் அஹம்மட் தலைமையில் சாய்ந்தமருது மல்ஹருஷம்ஸ் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் பெற்றோர்கள் சார்பாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பாடசாலை அதிபர் எம்.ஐ. நபார், கல்விமான்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கேடயம் மற்றும் சான்றிதழ்கள் அதிதிகளினால் வழங்கப்பட்டது.

# மழையால் இரு போட்டிகள் ரத்து: இலங்கை அணி உள்ள குழுவில் நெருக்கடி அதிகரிப்பு



டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றில் நேற்று நடைபெறவிருந்த குழு 1க்கான இரு போட்டிகளும் மழை காரணமாக ஒரு பந்து கூட விசப்படாமல் கைவிடப்பட்டன.

மெல்போர்னில் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் ஒரே மைதானத்தில் நடைபெறவிருந்த அயர்லாந்து எதிர் ஆப்கானிஸ்தான் மற்றும் இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போட்டிகளே கைவிடப்பட்டன.

ஆரம்பத்தில் அயர்லாந்து மற்றும் ஆப்கான் போட்டிக்கு தொடர்ச்சியாக மழை குறுக்கிட்டதால் மைதானத்தில் இருந்த மறைப்பை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து நடைபெறவிருந்த இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போட்டியிலும் இதே நிலை ஏற்பட்டது. இதனால் இரு போட்டிகளிலும் நாணய சுழற்சி கூட போடப்படவில்லை.

இரு போட்டிகளுக்கும் மழை குறுக்கிட்டதால் இலங்கை இடம்பெற்றிருக்கு குழு 1இன் புள்ளிப்பட்டியல் மேலும் இறுக்கமாகியுள்ளது. இதனால் இரண்டு புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் இருந்த இலங்கை அணி 5 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

முறையே முதல் நான்கு இடங்களில் இருக்கும் நியூசிலாந்து, இங்கிலாந்து, அயர்லாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் தலா 3 புள்ளிகளை பெற்றுள்ளன. எனினும் இங்கிலாந்து, அயர்லாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளை விடவும் இலங்கைக்கு மேலதிகமாக ஒரு போட்டி உள்ளது.

எனவே இலங்கை அணி தனது எஞ்சிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றால் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை பெற்று அரையிறுதிக்கு முன்னேற முடியும்.

இலங்கை அணி குறைந்தது இரண்டு போட்டிகளில் வென்றாலும் கூட இந்த மூன்று அணிகளையும் பின்தள்ள முடியும்.

மறுபுறம் மழை குறுக்கிட்டு இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு எஞ்சிய இரண்டு போட்டிகளும் கட்டாயம் வெல்ல வேண்டிய ஆட்டங்களாக மாறியுள்ளன.

அதிலும் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணியின் நிகர ஓட்ட விகிதம் மிகப் பின்தங்கி இருப்பது அந்த அணி அரையிறுதிக்கு முன்னேற சாதாரண வெற்றிகள் உதவாத சூழலை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் அவுஸ்திரேலியாவுக்கு எஞ்சிய போட்டிகள் அயர்லாந்து மற்றும் ஆப்கான் அணிகளுடனேயே உள்ளது.

இங்கிலாந்து, அயர்லாந்துடனான போட்டியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்ததோடு அவுஸ்திரேலியா நியூசிலாந்திடம் படு தோல்வி அடைந்தது.

புள்ளிப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் அயர்லாந்துக்கும் அரையிறுதிக்கு முன்னேற தனது கடைசி இரு போட்டிகளிலும் வெற்றி பெறுவது கட்டாயம் என்பதோடு ஒரு புள்ளியுடன் கடைசி இடத்தில் இருக்கும் ஆப்கான் அணிக்கு அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு சிறிய வாய்ப்பு ஒன்றே உள்ளது.

எவ்வாறாயினும் முதலிடத்தில் இருக்கும் நியூசிலாந்து அணி எஞ்சியிருக்கும் தனது மூன்று போட்டிகளில் இரண்டில் வென்றால் அரையிறுதியை உறுதி செய்ய முடியும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 29ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# சீனன் கோட்டையில் 90 ஆவது வருட ஸஹீஹூல் புஹாரி தமாம் மஜ்லிஸ்

பேருவளை சீனன் கோட்டை பிட்டவளை அல்மிர்அதுஷ்ஷாதுலிய்யா ஸாவியாவில் 90 ஆவது வருட புனித ஸஹீஹூல் புஹாரி தமாம் மஜ்லிஸ் (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை பகல் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். ஸைனுலாப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது.

முஹம்மத் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது வரலாற்றுப் புகழ்மிக்க இறுதி ஹஜ்ஜின் (ஹஜ்ஜதுல் விதா) போது அங்கு குழுமியிருந்த அருமைத் தோழர்கள் மத்தியில் உரையாற்றும் போது இதைச் சொன்னார்கள். 'உங்களுக்காக நான் இரண்டை விட்டுச் செல்கின்றேன். அவற்றைப் பின் பற்றும் காலமெல்லாம் நீங்கள் வழி தவற மாட்டீர்கள்' இறைவேதமாம் அல் குர்ஆனும் அண்ணலாரது நடைமுறைகளாகிய சுன்னாவுமே அவையிரண்டுமாகும்.

அல்லாஹ்வின் வசனங்களடங்கிய அல் குர்ஆனை ஓதிப் பயன்பெறும் சந்தர்ப்பங்கள் புனித ரமழானில், முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் எல்லாம் கிடைக்கின்றன. ஆனால் அல்குர்ஆனுக்கு அடுத்த இடத்தில் வைத்துக் கணிப்பிடும், இஸ்லாமிய மூலாதாரங்கள் அடங்கிய ஹதீஸ்களை அறிந்து விளங்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே கிடைக்கின்றன.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் ஹதீஸ் விளக்கங்களை தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்ற உண்மை உணரப்படவில்லை. அண்ணலார் உயிரோடு இருந்த காரணத்தினால் அன்று மக்கள் மத்தியில் எழுந்த பிரச்சினைகளுக்கு அண்ணலாரே விளக்கமளித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் ஹதீஸ்களின் முக்கியத்துவமும், மகோன்னதமும் உணரப்பட்டன. அல்குர்ஆனை நன்கு விளங்கிக் கொள்ளவும் இஸ்லாமிய திட்டங்களை விளங்கிக் கொள்ளவும் ஹதீஸ்கள் தேவைப்பட்டன. இதனால் காலக்கிரமத்தில் நபிகளாரின் பொன்மொழித் தொகுப்புக்கள் வெளிவர ஏதுவாயின. இவற்றுள் தலையாயதும், முக்கியம் வாய்ந்ததாகவும் கருதப்படுவது 'ஸஹீஹூல் புஹாரி' என்னும் ஹதீஸ் பேழையாகும்.

அபூ அப்துல்லாஹ் முஹம்மதிப்னு இஸ்மாயில் புகாரி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட மேற்படி நூல் அல் குர்ஆனுக்கு அடுத்தபடியாகச் சிரமேற்கொண்டு கருத்தப்பட்டுப் போற்றப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் வாய்வந்த இலட்சக்கணக்கான ஹதீஸ்களைத் தொகுத்து, 7275 ஹதீஸ்களை மட்டுமே இமாம் புஹாரி அவர்கள் தமது ஸஹீஹூல் புஹாரியில் எழுதியுள்ளார். தாம் தொகுக்கும் ஒவ்வொரு ஹதீஸூம் பிழையற்றதாக இருக்க வேண்டுமென்ற தூய எண்ணத்தினால் உந்தப்பட்டு ஒவ்வொரு ஹதீஸையும் எழுதமுன்னர் இரண்டு ரகஅத்துக்களை தொழுது கொண்டார்கள்.

தாம் தொகுத்த புஹாரி ஷரீபில் எந்த ஹதீஸ் முதலாவதாக இடம்பெறவேண்டுமென்பதில் புகாரி இமாமுக்குப் பிரச்சினை எழுந்தது. மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் அவனது எண்ணமே காரணம் என்ற உண்மை அவர்களது முயற்சிக்கு முதல் தூண்டுதலாக அமைந்தது. எனவே இமாம் அவர்களும் தமது நூலில், 'ஒவ்வொரு செயலும் எண்ணத்தையே பொறுத்திருக்கிறது' என்ற நபிகளாரின் ஹதீஸ் உடன் ஆரம்பம் செய்தார்கள்.

இவ்வளவு சிறப்புப் பொருந்திய இந்த அரிய புகாரி ஷரீபை மக்கள் சரிவரக் கேட்டு அதன்படி நடந்து மேம்பாடு அடைய வேண்டுமென்ற நோக்கில் இற்றைக்குச் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னர் பேருவளை சீனன் கோட்டை பிட்டவளையில் அமைந்துள்ள 'அல் மிர்அதுஷ் ஷாதுலிய்யா' ஸாவியாவில் ஓர் அரிய முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

அதிராம் பட்டிணத்தில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த ஷாதுலிய்யாத் தரீக்காவின் கலீபதுல் குலபாவும், அத்தரீகத்துல் ரிபாயிய்யா நக்ஷபந்தியா தரீக்காவின் கலீபாவுமான அல் ஹாஜ் அஹமது லெப்பை ஆலிம் சாகிப் (ரஹ்) (சேகுனா அப்பா) அவர்கள் இந்த ஸாவியாவில் இந்த உயரிய புகாரி மஜ்லிஸை ஆரம்பித்து ஆன்மிக ஒளிதரும் மங்காத தீபத்தை ஏற்றி வைத்தார்கள். 1935 ஆண்டில் பிட்டவளையில் புகாரி மஜ்லிஸ் நடைபெறும் இந்த ஸாவியாவை ஸ்தாபித்து வரும் நமது சேகுனா அப்பா அவர்களேயாவார்.

இந்த மஜ்லிஸ் நபி (ஸல்) அவர்கள் பிறந்த ரபீயுல் அவ்வல் மாதத்தில் முப்பது தினங்களிலும் சுபஹ் தொழுகையின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. தலைசிறந்த உலமாப் பெருமக்களால் உபன்னியாசங்களும் விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன.

சேகுனா அப்பா அவர்கள் பேருவளை மாளிகாஹேனை புகாரி தைக்காவிலும் சிலகாலம் தங்கியிருந்து அங்கு நடைபெற்று வரும் மேற்படி மஜ்லிஸையும் முன்னின்று நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னார் ஒரு தலை சிறந்த ஆலிமாகவும், ஒப்பற்ற இரத்தினக்கல் வியாபாரியாகவும் திகழ்ந்து இலங்கையின் எண் கோணங்களுக்கும் சென்று, மேன்மையான தீனுடைய பணியை மேற்கொண்டார். குறிப்பாக ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து, மக்களையும் தீனின்பால் நெறிப்படுத்தினார்கள். ஷாதுலிய்யாக் கோட்டை என்று அன்றும் இன்றும் வர்ணிக்கப்பட்ட சீனன் கோட்டையில் சேகுனா அப்பா அவர்களின் ஆன்மீகப் பணிக்கு உதவியவர்களில் வர்த்தகரான மர்ஹூம் சீ.எம்.எச் ஸாலி ஹாஜியார் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். இதனால் தான் சேகுனா அப்பா அவர்களை ஒரு சிறந்த கலீபதுல் குலபா என்றும் அவர் வாழ்ந்திருந்த காலகட்டத்தை பொற்காலம் என்றும் தற்கால மூத்த தலைவர்கள் அடைமொழி கூறுவதுண்டு. அல்ஹாஜ் அகமதுலெப்பை ஆலிம் சாகிப் அவர்கள் லௌகீகம், ஆன்மீகம் இரு துறைகளிலும் மேம்பட்டு விளங்கினார். வான சாஸ்திரத்திலும் அன்னார் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார். உலகின் பல நாடுகளுக்கும் சென்று கல்வி கற்ற இப்பெரியார். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயரிய நோக்கில் பணிபுரிந்தார். வெற்றி கண்டார்.

இப்பெரியாரது ஆன்மீகப் பணிக்கு மகுடம் வைத்தாற் போன்று அமைந்திருப்பது அதிராம் பட்டினத்தில் அன்னார் உருவாக்கிய ரஹ்மானியா மதரஸாவாகும். ரஹ்மானியா கலைக்கூடம் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து வந்த மாணவர்களுக்கு அறிவுப் பாலூட்டி அவர்களைத் தலைசிறந்த உலமாக்களாக மாற்றியமை சான்றுடன் கூடிய உண்மையாகும். அன்னார் இயற்றிய 'கிதாபுல் ஹஜ்' என்னும் நூல் ஹஜ்ஜின் சிறப்பு பற்றி எடுத்தோதுகிறது.

இவ்வாறு ஆன்மீக ஒளியேற்றிய மகானின் சேவையைக் குறித்து ஏற்கனவே பிட்டவளைத் தர்கா வீதியை 'சேகுனா அப்பா மாவத்த' என்று தற்போது பெயரிட்டு பாதுகாத்து வருகின்றனர் சீனன் கோட்டை வாழ் மக்கள். சீனன் கோட்டைப் பள்ளி வாசலில் அடங்கப்பட்டுள்ள சாச்சப்பா ஆலிம் (ரஹ்) உதுமான் லெப்பை ஆலிம் (ரஹ்) அபூஸாலி ஆலிம் (ரஹ்) ஹனீபா ஆலிம் (ரஹ்) எம்.ஐ.எம். மன்ஸூர் ஆலிம் (ரஹ்) இம் மஜ்லிசின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றியதையும் நினைவு கூர வேண்டும்.

அன்னார் என்ன நோக்கத்தோடு பிட்டவளையில் புகாரி மஜ்லிஸைத் தொடங்கி வைத்தார்களோ அந்த நோக்கு இன்று வரை சீனன் கோட்டை மக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதை நாம் இங்கு மகிழ்வுடனும் திருப்தியுடனும் குறிப்பிட விரும்பிகிறோம். எதிர்காலத்திலும் இப்பணி அதொடர வல்ல நாயன் அருள் புரியட்டும்.

இந்த மஜ்லிஸ் சிறப்புற நிறைவுசெய்ய நமது ஒத்துழைப்பினை நல்குவோமாக. எமது நாட்டங்கள் நிறைவேறவும் எமது தாய்த் திருநாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவவும் இந்த மஜ்லிஸில் பங்குபற்றிப் பிராத்திப்போமாக.

பேருவளை பி.எம். முக்தார்




# SLIM NASCO விருதுகள் 2022 SLIM தேசிய விற்பனை விருதுகள் ஆக மீளமைப்பு



இலங்கையின் சந்தைப்படுத்தலுக்கான தேசிய அமைப்பான, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (Sri Lanka Institute of Marketing SLIM) 2022 SLIM தேசிய விற்பனை விருதுகளை (முன்னர் SLIM NASCO என அழைக்கப்பட்டது) மீண்டும் நடாத்தவுள்ளது. விற்பனைப் பிரதிநிதிகளால் மிகவும் எதிர்பார்க்கப்படும் நிகழ்வான இது, 'SLIM தேசிய விற்பனை விருதுகள்' (SLIM National Sales Awards) என இவ்வருடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இது விற்பனை தொடர்பான அம்சத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த மதிப்புமிக்க நிகழ்வானது, தொடர்ச்சியாக கடந்த 20 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருவதோடு, நிறுவனங்களில் அதிக செயற்றிறன் கொண்ட விற்பனையாளர்களுக்கு அவர்களின் சிறந்த முயற்சிகள் மற்றும் விற்பனை தொடர்பான அம்சத்தில் அவர்களது சாதனைகளை கௌரவித்து, அவர்களுக்கு தேசிய அளவில் அங்கீகாரமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் விருதுகள் திட்டத்தை சிறந்த மட்டத்தில் நிலைநிறுத்துவது மற்றும் உலகத் தரத்திற்கு இணையான விற்பனை நிபுணர்களுக்கு அங்கீகாரமளிப்பதே, SLIM தேசிய விற்பனை விருதுகளின் தூர நோக்காகும். அத்துடன், வெற்றியாளர்களில் சிறந்தவர்களை உலக அரங்கில் சிறந்த மட்டத்திற்கு உயர்த்துவதற்கான திட்டங்களையும் SLIM கொண்டுள்ளது.

SLIM தேசிய விற்பனை விருதுகளானது, 20 இற்கும் மேற்பட்ட தொழில்துறைகளில் செயற்படுபவர்களுக்கு அங்கீகாரமளித்து வெகுமதிகளை வழங்குகின்றன. இது தனிநபர்கள் தமது நிறுவனங்களின் செயல்திறன் அடிப்படையில் விண்ணப்பிக்க அனுமதிக்கிறது. SLIM NSA 2022 போட்டிக்கான நுழைவு பிரிவுகளில் முன்வரிசையிலுள்ளோர் (FrontLiners FL), விற்பனை பிரநிதிகள் மற்றும் விற்பனை மேற்பார்வையாளர்கள் (Sales Executives & Sales Supervisors SE), பிராந்திய முகாமையாளர்கள் (Territory Managers TM), பிராந்திய விற்பனை முகாமையாளர்கள் (Regional Sales Managers (RSM) மற்றும் உதவி விற்பனை முகாமையாளர்கள் (Assistant Sales Managers), தேசிய விற்பனை முகாமையாளர்கள் (National Sales Managers NSM) மற்றும் விற்பனை முகாமையாளர்கள் (Sales Managers SM) உள்ளிட்ட ஏனைய விற்பனை உதவி ஊழியர்கள் (Sales Support Staff SM) அடங்குகின்றனர். 2022 SLIM தேசிய விற்பனை விருதுகளானது, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காக சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் முடிவுகளை அறிவிக்கும் ஒரு சிறந்த வருடமாக அமையவுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்குமான மதிப்பாய்வு காலமானது, உரிய நிறுவனத்தின் நிதியாண்டின் அடிப்படையில் 2021 டிசம்பர் 31 அல்லது 2022 மார்ச் 31 இல் நிறைவடையும் வருடமாக கணிப்பிடப்படும்.

SLIM தேசிய விற்பனை விருதுகளுக்கான விண்ணப்பங்களை https://slim.lk/nationalsalesawards ஊடாக பதிவிறக்கம் செய்யலாம். அனைத்து விண்ணப்பங்களும் 2022 நவம்பர் 30 பிற்பகல் 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், முறையாகப் பதிவுசெய்து, வணிகங்களை தொடர்ச்சியாக செயற்படுத்துகின்ற பொது மற்றும் தனிப்பட்ட உரிமை கொண்ட நிறுவனங்களும் போட்டியில் பங்கேற்க தகுதியுடையவர்களாவர்.

இப்போட்டி தொடர்பான மேலதிக தகவல்களை, கங்கானி 0703266988 மற்றும் திமித்ரா 0703463171 ஆகியோரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# மகளிர் நட்பு பணியிட விருதுகளில் சிறந்த பெண் நட்பு பணியிடமாக DIMO தெரிவு




இலங்கையின் சிறந்த பெண் நட்பு பணியிடங்களில் ஒன்று, எனும் விருதை DIMO நிறுவனத்தின் பிரதிநிதிகள் பெற்றுக் கொண்ட போது...

பல்துறை சார்ந்த முன்னணி நிறுவனமான DIMO, சமீபத்தில் இடம்பெற்ற AICPA & CIMA Satyn Women Friendly Workplace Awards 2022 (பெண்கள் நட்பு பணியிட விருதுகள்) விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் மிகச் சிறந்த பெண் நட்பு பணியிடங்களில் ஒன்றாக அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இதன் போது 'மிக பெண் நட்பு மிக்க புத்தாக்கம்/ நடைமுறைகள் கொண்ட இலங்கை நிறுவனம்' எனும் விருதும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இது நிறுவனத்தின், பெண் நட்பு கலாசாரத்தை வளர்த்து வரும் அசைக்க முடியாத முயற்சிக்கான கௌவரமாகும்.

பாரம்பரியமாக ஆண்களை மையப்படுத்தியதாக அறியப்படும் பல்வேறு தொழில் துறைகளுக்கு மத்தியில் வலுவான பாரம்பரியத்துடன், DIMO தனது குழுவில் உள்ள பெண்களுக்கான ஆற்றல்மிக்க பணியிட கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. STEM துறைகளிலும் பெண்களுக்கு வலுவான ஆதரவை வழங்குவதில் நிறுவனம் முன்னின்று செயற்பட்டு வருகின்றது.

இந்த கௌரவமான சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த, DIMO நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே, "AICPA & CIMA Satyn மகளிர் நட்பு பணியிட விருதுகள் 2022 விழாவில் நாம் அடைந்துள்ள இந்த வெற்றியானது, எமது ஊழியர்களான DIMO குழுவின் பெண்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை ஊக்குவிப்பதில், DIMO மிக அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதை காட்டுகிறது.

சமீப காலங்களில், DIMO நிறுவனத்தில் தலைமைப் பதவிகளில் பெண்களின் எண்ணிக்கையில் 5.8% அதிகரிப்பையும், வழக்கத்திற்கு மாறான பதவிகளில் பெண்களின் எண்ணிக்கை 15% அதிகரிப்பையும், பெண்களை ஆட்சேர்ப்பு செய்வது 4% அதிகரிப்பையும் நாம் காண்கிறோம்." என்றார்.

# ஆடை வடிவமைப்பாளர் ஆன்ட்ரியா ப்ரோக்கா, நவநாகரிக திரைப்பட தயாரிப்பாளர் கவுரப் கங்குலி ஆகியோருடனான செயலமர்வு



"இலங்கை வடிவமைப்பாளர்களின் அடுத்த தலைமுறை ஏற்றுமதிக்கான இலங்கை கைவினைப்பொருட்களை உருவாக்குதல் மற்றும் புதுமைப்படுத்துதல்" (Next generation of Sri Lankan designers – Developing and innovating Sri Lankan craft for export) என்ற செயலமர்வானது கொழும்பிலே நடைபெற்றது. இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவிற்காக (EU Delegation in Sri Lanka) கலாச்சார உறவுகள் தளத்தால் (Cultural Relations Platform) ஒருங்கிணைக்கப்பட்டு அனுசரணையளிக்கப்பட்ட இந் நிகழ்வை பேராசிரியர் ரொபேர்ட் மீடர் தயார்படுத்தியிருந்ததுடன், "இலங்கையில் கைத்தறி, பற்றிக் மற்றும் தும்பரா ஃபெஷன் தொழில் துறை" (Handloom, Batik & Dumbara Fashion Industry in Sri Lanka) பற்றிய சமீபத்திய 2022 ஆராய்ச்சி மற்றும் வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

"இலங்கையின் கைத்தொழில் மற்றும் இளைஞர்,யுவதிகளுக்கு அடுத்த தலைமுறை கைவினை முன்னோடிகளை ஊக்கப்படுத்துவதும், ஆதரிப்பதும், அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதும் மிகவும் முக்கியமானதாகும். கைவினைஞரே கைவினையின் எதிர்காலம், எனவே பல ஐரோப்பிய வர்த்தகநாமங்கள் மற்றும் வடிவமைப்பு நிறுவனங்கள் உலகளாவிய தளத்தை அடைய கைவினைத் துறையுடன் ஒத்துழைக்க விரும்புகின்றன. ஆனால் போட்டி என்ற மனப்பாங்கிலிருந்து ஒத்துழைப்பு என்ற மனப்பாங்கிற்கு மாறவேண்டியது மிகவும் முக்கியமானது. நாம் இந்தத் துறை முழுவதும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கலாச்சார உறவுகள் தளத்தின் பயிற்சி மற்றும் கல்விக்கான இந்த முயற்சி மற்றும் முதலீடு உலகத்தை மீண்டும் இலங்கையை நோக்கி திசைதிருப்புவதற்கான சரியான வாய்ப்பாகும்," ரொபேர்ட் மீடர்.

இந்த செயலமர்வில் ஐரோப்பாவின் முன்னணி கைவினைத் தளமேடையான XTANT இன் ஸ்தாபகர்கள் மற்றும் உலகின் மிகவும் இளம் ஆடை வடிவமைப்பாளரான ஆன்ட்ரியா ப்ரோக்கா (Andrea Brocca) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த திறமையான நவநாகரிக ஆடையணி புகைப்படக் கலைஞரும் ஆவணப்படத் தயாரிப்பாளருமான கவுரப் கங்குலி ஆகியோரின் விளக்கக்காட்சிகள் இடம்பெற்றன.

# பிற்கொடுப்பனவு கட்டணத்தை 50%ஆல் குறைத்து புதிய புரட்சியை ஏற்படுத்த தயாராகும் எயார்டெல் லங்கா




நாடு முழுவதிலுமுள்ள 24 மாவட்டங்களுக்கும் தமது தொலைத்தொடர்பு சேவையை வழங்குவதற்காக அதன் நாடு தழுவிய 4G ஐ அறிமுகப்படுத்தியதன் பின்னர், மற்றுமொரு துறையில், எயார்டெல் லங்கா தனது அனைத்து பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் அனைத்து வலையமைப்புகளுக்கும் வரையறையற்ற அழைப்புகளை அறிமுகப்படுத்திய முதல் தொலைத்தொடர்பு நிறுவனமாகும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், முற்கொடுப்பனவு பாவனையாளர்களுக்கு Freedom Unlimited Packகள் மூலம் எந்தவொரு வலையமைப்பிற்கும் வரையறையற்ற அழைப்புகளை அறிமுகப்படுத்தியது எயார்டெல் ஆகும்.

வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச மதிப்பை வழங்குவதன் மூலம் இலங்கை தொலைத்தொடர்பு துறையில் புரட்சியை ஏற்படுத்தும் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பணியின் ஒரு பகுதியாக, Airtel இன் Unlimited Freedom பிற்கொடுப்பனவு பெக்கேஜ்களின் சமீபத்தில் அறிமுப்படுத்தப்பட்டது Unlimited 1098 பெக்கேஜ் ஆகும். 1,098 ரூபா பெறுமதியில், புதிதாக வடிவமைக்கப்பட்ட இந்த Unlimited பெக்கேஜ் மூலம், பிற்கொடுப்பனவு பாவனையாளர்கள் எந்த வலைப்பின்னலுக்கும் வரையறையற்ற அழைப்புக்களை அனுபவிக்க முடியும்.

மேலும் 40GB 4G டேட்டாவுடன் முழு HD தரமான வீடியோ மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் SMS வசதிகளுடன் எந்த வலைப்பின்னலுக்கும் மாதத்திற்கு போதுமானதாக இருக்கும்.

மேலும், எயார்டெல் மட்டுமே பிற்கொடுப்பனவு பயனர்களுக்கு 'Data Rollover' வசதியைத் தொடர்ந்து வழங்கும் ஒரே தொலைத்தொடர்பு நிறுவனமாகும், இது மாதத்தின் பயன்படுத்தப்படாத டேட்டாவை அடுத்த மாதத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பதுடன், ஒரு பாவனையாளரின் Data செலவுகளைச் சேமிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. பாவனையாளர்கள் 200GB வரையிலான டேட்டாவை சேமிக்க முடியும். இது தடையற்ற HD தரமான சமூக ஊடகங்கள், வீட்டிலிருந்து வேலை செய்வது மற்றும் Download செய்ய உதவுகிறது.

தனிநபர்கள், பெருநிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஏற்றதாக, எயார்டெல்லின் வரையறையற்ற திட்டங்கள் அதன் பயனர்களுக்கு அதிகபட்ச மதிப்பை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளன. மிக உயர்ந்த தரமான அழைப்பு வசதிகள் மற்றும் மொபைல் Data சேவைகளை வழங்குவதுடன், எயார்டெல்லின் 1098 பேக்கேஜ் மாதாந்த தொலைத்தொடர்புச் செலவினங்களில் குறைந்த பட்சம் 50%ஐ குறைக்கிறது.

"ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் நியாயமான ஒப்பந்தத்திற்கான அணுகலை உறுதிசெய்து, எங்கள் பாவனையாளர்கள் அனைவருக்கும் உலகத் தரம் வாய்ந்த Mobile Broadband அனுபவத்தை வழங்குவதை உறுதிப்படுத்தும் புத்தாக்கங்களை உருவாக்குவதே எயார்டெல்லின் நோக்கம். எங்கள் முற்கொடுப்பனவு பயனர்கள் வரையறையற்ற சலுகைகளுக்காக, குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் போது, எங்கள் முற்கொடுப்பனவுபயனர்களிடமிருந்துபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளனர், மேலும் எங்கள் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு இதுபோன்ற மதிப்புமிக்க வாய்ப்புகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷீஷ் சந்திரா தெரிவித்தார்.

# வாடிக்கையாளர்களின் வசதிக்காக புதிய இணையதளம் மற்றும் விநியோக சேவையை அறிமுகப்படுத்துகிறதும் Alumex




இலங்கையின் மிகப்பெரிய முழுமையான ஒருங்கிணைந்த அலுமினிய உற்பத்தியாளரும், Haleys குழுமத்தின் அங்கத்தினருமான Alumex, நாடு முழுவதும் மொத்த மற்றும் சில்லறை அலுமினிய பொருட்கள் மற்றும் உபகரண விநியோக சேவைகளுக்காக www.alumexstore.com என்ற புதிய இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

www.alumexstore.com இணையதளம் நாட்டிலுள்ள ஒரு அலுமினிய உற்பத்தியாளரால் மொத்த மற்றும் சில்லறை அலுமினிய பொருட்கள் மற்றும் உபகரண விநியோக சேவைகளுக்காக நிறுவப்பட்ட முதலாவது இணையதளமாகும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் உயர்தர அலுமினியப் பொருட்களை ஒன்லைனில் வாங்கவும், அவர்களின் வீட்டு வாசலுக்கே வந்து விநியோகம் செய்யவும், உள்ளூர் Alumex களஞ்சியங்களில் இருந்து நேரடியாக வாங்கவும் உதவுகிறது. "இலங்கையின் மிகப் பெரிய அலுமினிய உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் என்ற வகையில், நாடு முழுவதும் பரந்து விரிந்துள்ள எமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஸ்மார்ட் உத்திகளை அறிமுகப்படுத்தும் ஒன்லைன் தளத்தை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் சேவைகள் தேவைப்படும் அனைவருக்கும் இந்த திறமையான விநியோக முறையின் மூலம் சேவைகளைப் பெறுவது எளிதாக இருக்கும், மேலும் இந்த புதிய இணையதளத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் தேவைகளுக்கு எங்களை நேரடியாக தொடர்பு கொள்ளவும் முடியும்." என Alumex இன் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் தெத்திவல தெரிவித்தார்.

# டிசம்பரில் இந்திய கலைஞகள், நடிகர்கள் பங்கேற்கும் பொழுது போக்கு நிகழ்வுகள், யாழ், கொழும்பில் ஏற்பாடு

இந்தியக் கலைஞர்கள் நடிகர்கள். பாடகர்கள் மற்றும் நடிகர் கிரிக்கெட் குழு பங்கேற்கும் பொழுது போக்கு நிகழ்வகள் எதிர்வரும் டிசம்பர் 08 மற்றும் 10,11ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடத்தப்பட்ட உள்ளன. இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை மேலும் ஊக்குவிக்கும் முகமாகவே இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தியா,மற்றும் மாலைதீவு,மலேசியா போன்ற நாடுகளில் இருந்து 10 ஆயிரக்கும் அதிகமான உல்லாசப் பிரயாணிகளை இலங்கைக்கு அழைத்துவரும் வகையில் இந்தப் பொழுது போக்குப் பொதி தயார் படுத்தப்பட்டுள்ளது என சுற்றுலத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார். அவரின் தலைமையில் கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டேல் பாடசாலையில் நடைபெற்ற ஊடக அமவர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த நடிகர்கள் மற்றும் தயாரிப்பாளர்களான ருத்ரா, விஜே சேதுபதி, பிரியங்கா டாணியல் அஸ்வின் அசீஸ் அக்தார் நவ்சாத் மற்றும் இலங்கைப் பாடகர்களும் இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதே போன்று டிசம்பர் 23ஆம் திகதி 80 நாடுகளின் உலக அழகு ராணிகள் இலங்கை வருகின்றனர். இந்த நிகழ்வினை மிகவும் சிரமப்பட்ட இலங்கைக்கு பெற்றதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சினால் இத் திட்டத்திற்காக எவ்வித சதமும் செலவுகளும் செய்யவில்லை. இந்தியாவில் உள்ள பொழுது போக்குக் கம்பனியே இலங்கை சுற்றலாத்துறையை ஊக்குவிப்பதற்காக முன் வந்து இந் நிகழ்வினை நடத்துகிறது. எனவும் ராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

# Kia மோட்டர்ஸ் (லங்கா) நிறுவனமானது தனது புதிய வாகன பராமரிப்பு நிலையத்தை நாரஹேன்பிடவில் ஆரம்பிக்க முதலீடு செய்துள்ளது



Kia மோட்டர்ஸ் (லங்கா) நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்காக கொழும்பு நாரஹேன்பிடவில் புதிய வாகன பராமரிப்பு நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது. இலங்கையில் மோட்டார் வாகன வர்த்தகத் துறை எதிர்நோக்கியுள்ள பாரதூரமான சவால்களையும் மீறி தொடர்ந்து வாகன பராமரிப்பு சேவை உட்கட்டமைப்பு பிரிவில் Kia நிறுவனம் முதலீடுகளைச் செய்து வருகின்றது.

புதிய முயை வாகன சேவை பராமரிப்பு நிலையமானது இலக்கம் 128, நாவலை வீதி, நாரஹேன்பிட கொழும்பு05 என்னும் இடத்தில் அமைந்துள்ளது. வாகனங்களுக்கான lubrication services, a Detailing Studio, உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களுக்கான சில்லறை விற்பனை சேவை, வாடிக்கையாளர் வரவேற்பு இடம், ஊழியர்கள் தங்குவதற்கான வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்தப் புதிய சேவை நிலையம் அமைந்துள்ளது.

"Kia வுக்கு இலங்கையில் விசுவானமான பெரிய வாடிக்கையாளர் தளம் ஒன்று உள்ளது. இந்த வர்த்தக நாமத்துக்கான ஏகபோக விநியோக அங்கீகாரமும் உள்ளது.

எனவே உலகளாவிய அதன் சேவை தரத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கான உள்கட்டமைப்புக்கள் மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவைகள் என்பனவற்றில் அர்ப்பணத்தோடு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது" என்று கூறினார் Kia மோட்டர்ஸ் (லங்கா) நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்றூ பெரேரா." இன்றைய இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக முயை வின் அதி நவீன வாகனங்களை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

ஆனால் எம்மோடுள்ள வாடிக்கையாளர்களுக்கான விற்பனைக்கு பிந்திய சேவைப் பிரிவில் நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்ப போவதில்லை" என்று அவர் மேலும் கூறினார்.










கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த 'காஷ்மீர் கறுப்பு தினத்தை' குறிக்கும் வகையிலான கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சி பி.எம்.ஐ.சி.எச்சில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் ஃபரூக் பர்கி,முன்னாள் அமைச்சா் ஏ.எச்.எம். பௌசி உட்பட புத்திஜீவிகள், அரசியல்வாதிகள்,தொழில் வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், காஷ்மீரின் உள்ளூர் நலன்விரும்பிகள் மற்றும் பாகிஸ்தான் சமூகத்தினர் என பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

# நகர்வலம்



## மத்திய சுற்றாடல் அதிகாரசபை புதிய தலைவர் அமைச்சர் ஹாபிஸ் நசீரை சந்தித்துப் பேச்சு



மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சுபுன் பத்திரகேயும், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களான சிரேஷ்ட பேராசிரியை திருமதி ஹேமந்தி ரணசிங்க, பேராசிரியர் அமரசிங்க மற்றும் பணிப்பாளர் சபை செயலாளரும் பணிப்பாளர் நாயகமுமான ஹேமந்த ஜயசிங்க, சட்டப் பணிப்பாளரும், உதவிச் செயலாளருமான மஞ்சுல விமலசேன ஆகியோரும் சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டை சந்தித்துக் கலந்துரையாடினர்.மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நடவடிக்கைகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் புதிய மூலோபாயங்களை உருவாக்கி செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவது குறித்தும் பிரச்சினைக்குரிய சுற்றாடல் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை வலுப்படுத்துவது குறித்தும் இங்கு பேசப்பட்டது.

அதுமட்டுமின்றி நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கான சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சந்திப்பின் போது அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

## இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் புதிய பணிப்பாளர் நாயகம்



இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் 7ஆவது பணிப்பாளர் நாயகமாக ரியர் அட்மிரல் பூஜித விதான நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, ரியர் அட்மிரல் பூஜித விதான அக்குரேகொடையிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் வைத்து பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன விடமிருந்து (ஒக்டோபர் 28) தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதுவரை காலம் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்த ரியர் அட்மிரல் அனுர ஏக்கநாயக்க அண்மையில் சேவையிலிருந்த ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே அதன் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக இருந்த ரியர் அட்மிரல் பூஜித விதான புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டத் தூதுக்குழுவினர் அதன் தூதுவர் டெனிஸ்ய சைபீய் தலைமையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை வியாழக்கிழமை (27), கொழும்பு 7, பௌத்தாலோக மாவத்தை அலுவலகத்தில் சந்தித்து, நாட்டில் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சமூக,பொருளாதார, அரசியல் நெருக்கடி நிலைமைகள் என்பன தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். கல்முனை பிரதி மேயரும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் இணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூரும் அதில் கலந்துகொண்டுள்ளார்.

## சிவநெறிச் செல்வர் தனபாலாவுக்கு சர்வதேச இந்துமதபீடம் பாராட்டு




சர்வதேச இந்துமத குருபீடம் சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம் வழங்கிய அருளாசியால் சோதனைகளுக்கு மத்தியிலும் நந்திக்கொடியை பறக்கவிட்டு சாதனைபுரிந்தவர் "சிவத் தொண்டர் "விடைக்கொடி வேந்தன் "சிவநெறிச்செல்வர் "சின்னத்துரை தனபாலா. தனபாலாவின் பெரும் முயற்சியால்தான் "நந்திக் கொடி "நாடாளுமன்ற வளாகத்திலும், உலகளாவிய ரீதியில் ஆலயங்கள் தோறும் பறந்துகொண்டிருக்கின்றன. இது உலகறிந்த உண்மை. இவரது ஆன்மீக பணி தொடர சர்வதேச இந்துமத குருபீடத்தின் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவிப்பதாக இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமுதல்வர் மஹாராஜ ராஜகுரு ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் தெரிவித்துள்ளார்.





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் மறைந்தும் மறையாத எனும் இசை நிகழ்ச்சியில் பாடகர்களான (போல் பெர்ணான்டோ,என்டர் ரோட்ரிகோ) ஆகியோரின் பாடல்கள் ஏனைய கலைஞர்களினால் பாடப்பட்டன. இந் நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் தலைமையில் (27) வியாழக்கிழமை மாலை ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்ற போது மறைந்த கலைஞர்களின் பாடல்களை பாடிய பாடகர்களுக்கு நிலையத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பரிசில்களை வழங்கினார்.



கனடா விழித்தெழு பெண்ணே மகளிர் அமைப்பு 45 பெண்களுக்கு ஆளுமைப் பெண் விருதுகளை வழங்கி கௌரவித்திருந்தது. இந்த மாபெரும் விருது வழங்கும் விழா கனடாவில் கடந்த 14ம் திகதி நடைபெற்றுள்ளது. உலகளாவிய ரீதியில் பல துறைகளில் சிறந்து விளங்கும் ஆளுமை நிறைந்த தமிழ் பெண்களை கௌரவிக்கும் முகமாக இந்த விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலகிலுள்ள நாற்பத்தைந்து பெண்களுக்கு இவ்வாறு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் விருது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. விழித்தெழு பெண்ணே அமைப்பின் தலைவர் சசிகலா அம்மணியின் தலைமையில் கனடாவில் வாழும் பல தமிழ் உறவுகளும் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.




## நவாஸ் கபூர் ஹாஜியார் காலமானார்

*(எம்.எஸ்.எம்.ஸாகிர்)*

நவாஸ் கபூர் ஹாஜியார் தனது 95 ஆவது வயதில் காலமானார்.

இவர், கபூரிய்யா அரபுக் கல்லூரியின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் அதேவேளை, மருதானைப் பள்ளிவாசல், சத்தம் வீதி பள்ளிவாசல் ஆகியவற்றின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் இருந்ததோடு, இலங்கை சாரணர் பிரிவிலும் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தில் பாக்கீர் மாக்கார் தலைவராக இருந்த காலத்தில் ஸ்தாபக பொருளாளராகவும் இருந்துள்ளார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று மருதானைப் பள்ளிவாசலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தொழுகை இடம்பெற்று, குப்பியாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரது மரணம் குறித்து கபூரிய்யா அரபுக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தினர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்,

கபூரிய்யா அரபுக் கல்லூரியின் ஸ்தாபகர் என்.டீ.எச். அப்துல் கபூர் ரஹ்மத்துல்லாஹியின் பேரனும் கபூரிய்யா அரபுக் கல்லூரியின் நம்பிக்கையாளர் சபையின் நீண்ட காலத் தலைவராகவும் இருந்த நவாஸ் கபூர் ஹாஜியாரது பிரிவு செய்தி கேட்டு, கல்லூரி அதிபர் உட்பட ஆசிரியர்கள் அதன் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆழ்ந்த கவலையினை தெரிவித்துக் கொள்கின்றனர்.

அப்துல் கபூர் ஹாஜியாருக்குப் பின்னர் அவரது பிள்ளைகளான பளீல் கபூர், ரஃபி கபூர் ஆகியோர் கல்லூரியோடு மிக நெருக்கமாக இருந்ததைப் போன்றே நவாஸ் கபூர் ஹாஜியாரும் கல்லூரியோடு, கல்லூரியின் கல்வி வளர்ச்சியோடு, மாணவர்களது கல்வி அடைவுகளோடு நெருக்கமாகவும் கரிசனையோடும் இருந்தார்.

1980, 90களில் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்காக கபூரிய்யா அரபுக் கல்லூரிக்கு வந்து, மாணவர்களது குத்பா பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். மாணவர்கள் உயர் படிப்புக்காக வெளிநாடு செல்லும் போது கல்லூரியில் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களில் தவறாது பங்கு கொண்டு உயர்கல்விக்காகச் செல்லும் மாணவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கி வழி அனுப்புவார்.

2015 ஆம் ஆண்டு கல்லூரியில் நடைபெற்ற பழைய மாணவர் சங்க எழுச்சி விழாவின் போது விசேட அதிதிகளாக வருகை தந்திருந்த நம்பிக்கையாளர் சபை அங்கத்தினர் சார்பாக பேசும்போது, "கபூரிய்யா பெரு விருட்சமாக வளர்ந்துள்ளது என்பதை அறியும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது" என கூறியதும், தனக்கு முடியாத காலத்திலும் அன்றைய கூட்டத்துக்கு சக்கர நாற்காலியில் வந்திருந்ததும் அவர் கல்லூரியின் வளர்ச்சியில் எவ்வளவு அக்கறையுடன் இருந்தார் என்பதைக் கூறப் போதுமானதாகும்.

நிரந்தர மறுமை வாழ்வுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நவாஸ் கபூர் ஹாஜியாரை அல்லாஹ் பொருந்திக் கொண்டு, அன்னாருக்கு மேலான ஜன்னத்துல் பிர்தௌவ்ஸை வழங்குவானாக!, அன்னாரது பாவங்களை மன்னித்து, அன்னாரது கபூருடைய வாழ்வினையும் மறுமை வாழ்வினையும் ஒளிமயமான தாக்கி வைப்பானாக!

கபூரிய்யா அரபுக் கல்லூரி விடயத்தில் அன்னார் விட்டுச் சென்ற நற்பணியினை இன்றைய நம்பிக்கையாளர்கள் மிகச் சிறப்பாக தொடர்வதே, அப்துல் கபூர் ஹாஜியார் ரஹ்மத்துல்லாஹியின் நன்நோக்கத்தைநிறைவேற்றமேற்கொள்ளப்படும் சிறந்த பணியாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அல்லாஹ் எம் அனைவரையும் அவனது மேலான ஜென்னத்துல் பிர்தௌஸில் ஒன்று சேர்த்தருள்வானாக! என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.